காலசிம்ஹன்

அல்லது

அற்புதசம்பவங்களுக்கரசன்



வல் பிரசுராலயம்,
சேலம்.

 1936 விலை 2 அணா

கடிகாரம் ரிப்பேர் செய்ய வேண்டுமா?

அப்படியானால் உங்கள் கடிகாரங்களைக் கொண்டு வாருங்கள். அவைகளை நன்கு பரிசோதித்து சுத்தப்படுத்தி நீடித்த நாள் உழைக்கும்படி உத்திரவாதத்துடன் ரிப்பேர் செய்து கொடுக்கிறோம். கடிகாரங்களுக்குத் தேவையான சாமான்களும் மிகக் குறைந்த விலையில் போட்டுக் கொடுக்கிறோம். நீங்கள் கடிகாரம் வாங்குவதாய் இருந்தாலும் எங்களை யோஜனை (Consult) கேட்கும்படியாய் கேட்டுக் கொள்கிறோம்.

யு. சந்திரமௌளி அய்யர்,

கடிகார வியாபாரி & ரிப்பேரர், முதல் அக்கிரகாரம், சேலம்

மர எழுத்து போர்டு தொழிற்சாலை.

கடைவீதி சேலம்.

இத்தொழிற்சாலையில் வியாபாரிகள், வக்கீல்கள், பாங்கர்கள் முதலியோர்களுக்கு தேவையான அளவில் மர எழுத்து போர்டுகள் மிக நேர்த்தியாக செய்து கொடுக்கப்படும். மரஎழுத்து போர்டு ஒன்று செய்து வைத்துக் கொண்டால் வெகு காலத்திற்கு நீடித்து இருப்பதுடன் பார்வைக்கும் நன்றாக இருக்கும். சார்ஜ் மிகக்குறைவு இப்போர்டுகளில் செலவழிக்கும் பணத்திற்குத் தக்கின சாமான்கள் உங்களுடன் எப்போதும் இருக்கும்.

வி. ஆர். ராமராவ்,

மாடர்ன் ஆர்டிஸ்டிக் மரஎழுத்து தொழிற்சாலை,

கடை வீதி, சேலம்.

ஒயிட்ஸ் மருந்து

ரிஜிஸ்டர்

உள்மூலம் வெளிமூலம் பவுத்திரம் எதுவாயிருந்தாலும் ஆப்ரேஷன் இல்லாமல் குணப்படுத்துவதற்கு உத்தரவாதம் உள்ளது.

ஒயிட்ஸ் வைத்தியசாலை, கூச்சுக்கல் தெருவு,

அம்மாப்பேட்டை, சேலம். தெ. இ

கால ஸிம்ஹன்

அல்லது

அற்புத சம்பவங்களுக்கரசன்.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளக் கூடிய
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
அதி அற்புதத் தமிழ் நாவல்.

ஆசிரியர்.

கோவை. ஸி. கே. கணபதி அய்யர்,

நாவல் பிரசுராலயம், சேலம்.

1936.

 [விலை 2 அணா

ஸ்ரீ வெங்கடேச பிரஸ், சேலம்.

காலசிம்ஹன்

அல்லது

அற்புத சம்பவங்களுக்கரசன்.

இருகொடிய கண்கள்.

முதல் அத்தியாயம்

தலைகிருகிருத்து, கண்சுழன்று, கீழே விழுந்த அதிர்ச்சியினால் தனது தேகத்தின் பலவிடங்களிலும் பட்ட பலமான அடிகளால் எழுந்திருக்க முடியாமல், ஓர் நிர்மானுஷ்யமான மலையடிவாரத்தின் கட்டாந்தரையில் சுமார் 30 வயதுடைய வாலிபன் ஒருவன் இருபுரங்களிலும் புரண்டு புரண்டு படுத்தவண்ணம் "ஐயோ! அப்பா!" என்று அனத்திக்கொண்டிருந்தான்.

அவன் நன்கு வளர்ச்சிபெற்ற அழகிய சரீரத்தை பெற்றிருந்ததுடன், மிகவசிகரமான முகத்தோற்றத்தையுமுடையவனைக் காணப்பட்டான். அவன் மிகச்சிறந்த கல்விமான் என்பதையும், எக்காரியத்தையும் விடாமுயற்சியுடன் சாதிக்கும் ஆற்றல் படைத்தவன் என்பதையும் அவனுடைய கூறிய விழிகள்வெளிப்படுத்தின. பஞ்சகச்சம் வைத்துக் கட்டிக்கொண்டிருந்த அவனுடைய மயில்கண் வேஷ்டியும்

மேலே அணிந்திருந்த ட்வில் ஷர்ட்டும் புழுதி பட்டு அழுக்க டைந்திருந்ததுடன், ஒழுங்காக கிராப்பு சீவி வாரிவிடப்பட் டிருந்த அவன் தலை ரோமமானது அப்போது வீசிக்கொண் டிருந்த காற்றினால் கலைவுற்று அவன் முகத்தை அடிக்கடி மூடி மூடிமறைத்தன. தான் பட்ட அடியின் அவஸ்தை யோடு இவ்வுபத்திரவத்தையும் சகிக்க இயலாதவனாய் மெது வாக எழுந்துட்கார்ந்து தன் கரங்களினால் த ன் தலைமயிரை சீர் படுத்திக் கொண்டான்.

எதற்கும் தளரா திடச்சித்தம் வாய்ந்தவனானபடியால் தன் மனதை சி றி து திடப்படுத்திக்கொண்டு மெதுவாக எழுந்திருந்தான். தனக்குச் சிறிதுதூரத்தில் கவிழ்ந்து கிடந்த பல உலோகங்களைக்கொண்டு செய்யப்பட்ட ஓர் இ ய ந் தி ரத்தை எடுத்து தன் பக்கத்தில் வைத்துக் கொண்டான். அவ்வியந்திரமானது தங்கம், இரும்பு, துத்திநாகம் போன்ற பல உலோகங்களைக் கொண்டு பல ரசாயனப்பொருள்களின் சேர்க்கையால் செய்யப்பட்டிருந்தது. அப்போது அடித்த சூர்ய காந்தியின்முன் மேற்படி இயந்திரமானது பளீர் பளீ ரென டால் அடித்துக்கொண்டிருந்தன. அவ்வியந்திரத்தில் ஏதாவது பழுதேற்பட்டிருக்குமோ என்ற எண்ணங்கொண்ட வனாய் அதன் ஒவ்வொரு பாகங்களையும்மிக உன்னிப்பாக ஆராய்ச்சி செய்துபார்த்தான். அவன் முகத்தில் பி ர தி பலித்த திருப்தியிலிருந்து மேற்படி இயந்திரம் நல்ல நில மையிலிருப்பதாகத் தெரிய வந்தது. அவ்வியந்திரத்தின்மேல் படிந்துள்ள புழுதியைத்தனது கைக்குட்டையால் துடைத்து சுத்தப் படுத்தினான்.

அவன் புசித்து வெகு நேரமாய்விட்டபடியால் பசி உபத்திரவம் அவனுக்குச் சகிக்க இயலாததாக இருந்தது. பசியைவிட தாகம் அவனைப்பன்மடங்கு வாட்டியது. தாக சாந்திசெய்து கொள்ள ஏதாவது ஆறு, அல்லது நல்ல கிணறு சமீபத்திலிருக்குமோ என்பதை அறிய ஆவல் கொண்டவனாய் மெள்ள மெள்ளத்தன் சமீபத்திலிருந்த மலைக் குன்றின் மேல் ஏறிப்பார்த்தான். மலையைச் சுற்றிலும் சுமார் ஒரு மைல் விஸ்தீர்ணத்திற்கு வெறும் வெட்ட வெளி யாக இருந்ததுடன், அதற்குமேல் செழுமையான பயிர் பச்சைகள் நிறைந்தவயல்களும், மரஞ்செடி கொடிகள் நிறை ந்த தோட்டங்களும் கண்களுக்குப் புலப்பட்டன. ஆனல் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஆருவது குளம் குட்டை யாவது தென்படவேயில்லே.

பசுமையான பயிர் பச்சைகளேக்கண்டதும் அவனுக்கு சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. அவ்விடத்தில் எப்படியும் ஒரு குளம், குட்டையாவது இருந்தே தீரவேண்டும் என்று தீர்மானித்தவனாய் அவ்விடம் நோக்கிப்புறப்பட்டான். அத ற்குள் அங்குவைக்கப்பட்டிருந்த, அவ்வியந்திரத்தின் கியா பகம் வரவே, அதை எங்கேயாவது மறைத்து வைக்கவேண் டியது மிக அத்தியாவஸ்யமாகப்பட்டது. அவ்வியந்திரத்தில் முடுக்கப்பட்டிருந்த ஒரு முக்கியமான மறையாணியைக் கழட்டி எடுத்தான். அவ்வியந்திரத்தை எடுத்துக்கொண்டு போய் எவ்விடத்தில் மறைத்து வைக்கலாம் எனச் சிறிது நேரம் வரை ஆராய்ச்சி செய்தான். அக்குன்ருனது எங்கும் ஒரே வெட்ட வெளியாக இருந்ததுடன் புதர்கள் காணப்படு

வது கூட மிக அரிதாக இருந்தமையால் பத்திரப்படுத்தும் வகையறியாது தவித்தான். உடனே இயந்திரத்தைக்கீழே வைத்துவிட்டு அம்மலையின் ஏனைய பாகங்களில் சென்றுபார்த்தான். நான்கு பேர் நுழையக்கூடிய அளவுக்கு ஓர் சிறிய அறை போன்ற ஒரு குகையைக்கண்டு அளவற்றமகிழ்ச்சியுற்றவனாய் அவ்வியந்திரத்தை அதற்குட் கொண்டுசென்றான். அக்குகைக்குள் ஒரு பள்ளமான இடத்தில் அதை பத்திரப்படுத்தி அதன் மேல் செடி கொடிகளைக்கொண்டு வந்து மூடி பந்தோபஸ்துசெய்தான். தான் கழட்டி எடுத்துக்கொண்ட மறையாணியையும் அதற்குச்சமீபத்திலேயே ஒரு சிறிய குழி தோண்டி புதைத்துவைத்து, அடையாளமாக பல பெருங்கற்களை அதன்மேல் வைத்துவிட்டு வெளியிற் புறப்பட்டான்.

இக்காரியங்கள் நடந்தேறுவதற்குள் பகல் 12 மணிக்கு மேல் ஆகிவிட்டது. கீழே விழுந்தடிபட்ட அதிர்ச்சியினாலும், பசிதாகத்தினால் ஏற்பட்ட களைப்பாலும், இயந்திரத்தை மறைத்து வைப்பதின் மூலம் விளைந்த சிரமத்தினாலும், உடல் தளர்ந்து ஓரடி எடுத்துவைக்கக்கூட சக்தியற்றவனாய்க் கீழே படுத்துவிட்டான். நிழல்தரும் மரங்கள் ஒன்றும் சமீபத்திலில்லாமையால் சூரிய உஷ்ணத்தினால் கொதிப்புற்ற அக்கட்டாந் தரையில் படுக்கக்கூட சாத்தியப்படாமல் தவியாய்த்தவித்தான். சகிக்கமுடியா வெப்பத்தினால் தகிக்கப்பட்ட அவ்வாலிபன் மெள்ள எழுந்திருந்து தள்ளாடியவண்ணம் நடந்துசென்றான்.

தனக்குச் சிறிது தூரத்தில் இருப்பதாகப் புலப்பட்ட

அப் பயிர்பச்சைகள் நிறைந்த இடம் சுமார் ஒரு மைலுக்கு மேல் நடந்தும், வெகுதூலவில் இருப்பதாகக்காணப்பட்டது. தான் எப்படியாவது சிரமப்பட்டு அவ்விடத்தை அடைந்து விட்டால் தன் தாகந்தீர குளிர்ந்த ஜலமருந்துவதுடன், சிரமந்தீர நல்லநிழலில் படுத்து சிரமப்பரிகாரம் செய்துகொள்ளலாம் என்ற எண்ணமுதிக்கவே, தன்சிரமங்களை ஒருவாறு மறந்து சற்று உற்சாகமாக சிறிது தூரம் வரை நடந்து சென்றான். கடைசியாக அவன் அதிநம்பிக்கையுடன் எதிர்பார்த்த இடத்தை அடைந்தான். ஆனால் அவனுடைய பெருத்த நம்பிக்கையானது பெரிய ஏமாற்றத்தில முடிந்தது. ஏனெனில் அவன் கண்ணுக்குத்தென்பட்ட பயிர் பச்சைகளையுடைய அச் செழிப்பான இடத்தை அடைவதற்கு முன் அங்கு குறுக்கிட்ட ஓர் மணல் வெளியைக்கடந்து செல்லவேண்டியது அவசியமாக நேர்ந்து விட்டது.

மணல் வெளியைக்கண்டதும் அவனுடைய நம்பிக்கைகள் எல்லாம் பறந்துவிட்டன. பலஹீனமும், மனச்சோர்வும் அவனை ஏகமாகப் பற்றி என்ன செய்வது எப்படிச் செல்வது என்று ஒன்றும் நிர்ணயிக்க முடியாதவாறு அவனுடைய மூளையைக்குழப்பின. திரும்பவும் பழய இடத்திற்குச் சென்றுவிடலாம் என்றாலும் மீண்டும் பழய இடத்திற்கு நடந்து செல்வது மிகக்கஷ்டமாகத்தோன்றியது. அப்படி பழய இடத்தைப் போயடைவதிலும் யாதொரு பிரயோஜனமுமிருப்பதாகத்தோன்றவில்லை. அக்கடும் வெய்யலில் அம்மணல் வெளியைக்கடந்து செல்வதும் சாத்தியமற்றதாகத் தோன்றியது. என்னசெய்யலாம் எனச்சிறிது நேரம்

வரையில்சிந்தனை செய்தான். "என்னநேர்ந்தாலும் நேரட்டும். மேலும் யோசித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை" என்ற முடிவுக்கு வந்தவனாய் மெதுவாக மணல் வெளியில் காலை எடுத்து வைத்தான்.

பகல் 12 மணி கடும்வெய்யலில் கொதிப்புள்ள அம் மணல் வெளியானது அவனுடைய கால்களைச் சுட்டு பொள்ளிப் போகும்படி செய்தது. அவ்வுஷ்ணத்தைத்தாங்க இயலாதவனாய் குதித்துக்குதித்தோடினான். எவ்வளவுக் கெவ்வளவு அதி வேகமாகக் குதித்துக் குதித்தோடினானோ அவ்வளவுக் கவ்வளவு அவன்கால்கள் மணல்வெளியில் புதையுண்டு கொப்பளித்தன.

சூடுதாங்க மாட்டாமல் ஒருகாலை எடுத்தால், மற்றோர் கால் புதைந்து உஷ்ணத்தால் தகித்து மரண வேதனையை உண்டு பண்ணியது. நெருப்பில் விழுந்த புழுப்போல் துடிதுடித்தான். தன் பல்லைக் கடித்துக்கொண்டு தன்பலங் கொண்டமட்டும் பாய்ந்தோடினான். மீண்டும் சகிக்கமாட் டாமல் இரண்டு விநாடிகள் தாமதித்தான். தாமதிக்கும்ஒவ் வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாகப்பட்டது. நின்றுகொ ண்டிருப்பதை விட நடந்து செல்வதே மேலெனத் தோன்றியது.

சகிக்க இயலாக் களைப்பாலும், உஷ்ணத்தாலும் பெருமூச்சி வாங்க, அஸ், உஸ், என்ற சப்தத்துடன் வேர்க்க விருவிருக்க உன்மத்தம் பிடித்தவனைப்போல் ஓடினான். கடைசியாகத் தலை கிறுகிறுத்து நாவரள, மணல் வெளியைத்

தாண்டி அதற்குச் சமீபத்திலிருந்த ஓர் மரத்தின் நிழலில் தொப்பென்று விழுந்தான். விழுந்ததுதான் தாமதம். தன் நினைவு தனக்கில்லாமல் உயிரற்ற சவம் போல் உணர்விழந்த தன்மையில் மயக்கமுற்று இருந்தான்.

எவ்வளவு நேரம் அவ்வாலிபன் அம்மாதிரி நிலைமையில் இருந்தான் என்று கூறமுடியாது. மாலை மணி 6 ஆயிற்று. கொஞ்சங் கொஞ்சமாகத்தன் சுய உணர்வை அடைந்துகண் விழித்துப்பார்த்தான். அவனுடைய கண்களில் ஆச்சரியம் பிரதிபலித்தது. தான் சலவைக் கற்களால் கட்டப்பட்ட ஓர் பெரிய அறையில் நல்ல பட்டு மெத்தையின் மேல் சயனித்துக்கொண்டிருப்பதையும், தன் தலைக்கு நேரே ஓர் விசிறி ஜிலுஜிலுவெனக் காற்று வீசிக்கொண்டிருப்பதையும் அவ்வறை முழுவதும் எலக்டிரிக் விளக்குகளால் பொருத்தப் பட்டு பளிச்சென்று பிரகாசம் வீசிக்கொண்டிருப்பதையும் அவ்வறையின் சுவர்களில் பல விநோத சித்திரப் படங்கள் வெகு அழகாக மாட்டப்பட்டிருப்பதும் அவனுக்கு பிர மிப்பை உண்டாக்கிற்று. தான் இங்கு எப்படி வந்தோம், யார் கொண்டு வந்திருப்பார்கள் என்பதை அறிய முடியாதவனாய் பழைய சம்பவங்களையெல்லாம் ஒன்றின் பின் ஒன்றாகத் தன் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தான். தான் அன்று கீழே விழுந்து பலமான அடி பட்டதும், ஜலமருந்தவேண்டி புறப் பட்டதும், வழியில் மணல் வெளியைக்கடக்க தான் பட்ட கஷ்டங்களும், அதன் மேல் தான் ஒரு மரத்தினிழலில் ஆயாசந் தீரப்போய் படுத்துக்கொண்டதும் ஒன்றின் பின் ஒன்றாக ஞாபகத்துக்கு வந்தன. அதற்கு மேல் அவனுக்கு

ஒன்றுமே தெரியவில்லை. தான் காண்பது கனவோ அல்லது நினைவோ என்ற எண்ணமுதித்தது. தன்னை அறியாதபடி தன் கண்கள் தான் மோசஞ் செய்கின்றனவோ எனத் தன் கண்களைத் தேய்த்துக்கொள்ள தன் வலக்கையை தூக்கினான். அக் கையுடன் கூட ஓர் அழகான வெள்ளிச்சங்கிலியும் வரவே, அவனுடைய ஆச்சரியம் பன்மடங்கு அதிகமாயிற்று. மற்றோர் கரத்தையும் தூக்கினான். அத்துடன் கூட மற்றோர் வெள்ளிச்சங்கிலி வரவே, மேற்படி சங்கிலி எப்படி தன் கரத்திற்கு வந்தது என்பதையறிய ஒரு கரத்தில் பொருத்தப்பட்டிருந்த சங்கிலியை மற்றொரு கரத்தால் பற்றியிழுத்தான். என்ன இழுத்தும் சிறிது நீளத்திற்கு மேல் வராமற்போகவே "ஒஹோ! நமக்கு விலங்கிடப்பட்டிருக்கிறாப்போலிருக்கிறது" என்று மெதுவாகக் கூறிக்கொண்டான். உடனே தன் கால்களைத் தூக்கினான். அவைகளிலும் சங்கிலி இணைக்கப்பட்டிருப்பதைக் காணவே, அவனுடைய ஆச்சரியமெல்லாம் பறந்து போய் மனந்திடுக்கிட்டெழுந்தான். "நாம் எதிர்பாராவிதத்தில் யாரோ துஷ்டர்களுடைய சூழ்ச்சியால் சிறை வைக்கப்பட்டிருக்கின்றோம் போலிருக்கின்றது" என்றுகூறிக்கொண்டான். தன் சொக்காய் பையில் வைத்திருந்த கடிதக் கட்டுகளும் பணப்பையும் சரியாக இருக்கின்றனவா என்று ஜேபியைத் தட்டிப்பார்த்தான். தன் உடைகள் முழுமையுமே கழட்டப்பட்டு மாற்றுடைகள் அணிவித்து படுக்க வைத்ததிலிருந்து, தன்னைக்கொண்டு வந்த பாதகர்கள் தான் அவைகளையும் களவாடியிருக்கவேண்டும் என்பது நிச்சயமாகப் புலப்பட்டது. "என்னை எக்காரணத்திற்காக

பிடித்து சிறைவைத்திருக்கக்கூடும், நான் யாருக்கு என்ன தீங்கிழைத்தேன், என்னை சிறை வைப்பதால் அவர்களுக்கு உண்டாகும் அனுகூலமென்ன" என்று,எவ்வளவோயோசித்தும் சரியான விடை அவனுக்குத் தோன்றவில்லை. கடைசியாக அறையைச் சுற்றி படுத்திருந்தபடியே பார்த்தான். யாரையுமே காணப்படவில்லை. அவனுடைய மனமானது பொருக்கமுடியாத துன்பத்தையடைந்தது. தன்னைச் சிறைப்படுத்தியவன் எவனாய் இருந்தபோதிலும் அவனுக்குச் சரியான புத்திமதி புகட்டவேண்டும் எனத்தீர்மானித்தவனாய் ரௌத்திராகாரமான கோபத்துடன் படுக்கையை விட்டு எழுந்தான். அவன் எழுந்து உட்கார, படுக்கப்போதுமான அளவு நீளம் சங்கிலி விடப்பட்டிருந்ததே ஒழிய படுக்கையைவிட்டுக் கீழிறங்கி நிற்கவாவது அல்லது வெளியே போகக் கூடிய அளவுக்காவது விடப்படவில்லை. எழுந்துட்கார்ந்ததும் சரேலெனத் தன் பின்புறம் திரும்பினான்.

பின்புறம் திரும்பியதும் மனந்திடுக்கிட்டு "ஆ" வென்றலறிய குரலுடன் படுக்கையில் மீண்டும் சாய்ந்தான். சுமார் 6 அடி உயரமுள்ள கருத்துப்பெருத்த பயங்கரமான முகத் தோற்றமுடைய ஒரு மனித உருவம் தன் இரு கொடிய கண்களால் முறைத்துப்பார்த்தபடி தன் கையில் கைத்துப்பாக்கியைத்தயாராகப் பிடித்துக்கொண்டு மேற்படி வாலிபனை நோக்கிக்குறி வைத்துக்கொண்டிருந்தது. மேற்படி வாலிபன் என்ன தான் கலங்காநெஞ்சம் வாய்ந்தவனாக இருந்தும் மேற்படி எதிர்பாரக்காட்சியைக் கண்ணுற்றதும் ஒன்றுந்தோன்றாமல் மயக்கமுற்று கண்களை இறுக மூடிக்கொண்டான்.

இரண்டாம் அத்தியாயம்

குள்ளர் மகா சபையின் தீர்ப்பு.

அன்று காலை குமுதபுரி நகரமெங்கும் ஒரே பரபரப்பாகவிருந்தது. அந்நகரத்தை அடுத்த ஒரு பெரிய மைதானத்தின் நடுமையத்தில் வரிசை வரிசையாக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவைகளுக்கு நடுவில் ஓர் மேடை கட்டப்பட்டு அதன்மேல் 11 நாற்காலிகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஒரு நாற்காலிமட்டும் அம்மேடையின் ஒரு ஓரத்தில் தனித்துப் போடப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாற்காலியின் எதிரிலும் ஒவ்வொரு மேஜை விதம் போடப்பட்டு அவைகளின் மேல் ஒரு தட்டு நிறைய கனி வர்க்கங்களும் புஷ்பக்கொத்துகளும் வைக்கப்பட்டிருந்தன.

மணி 10 அடித்தது. அம்மைதானத்தின் நேர் எதிர்ப்புறமிருந்த ஒரு பெரிய கட்டிடத்தின் வாயற்படி வழியாக கும்பல் கும்பலாக சுமார் 3 அடி உயரமுள்ள குள்ளர்கள் சிறித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும், தங்களுக்குள் பலவிதமான சம்பாஷணை செய்து கொண்டும் மிக உல்லாசமாக ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி ஒருவர் கையை ஒருவர்கோர்த்தவண்ணம் வந்துகொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஆண்கள் இடுப்பில் நீல நிற உடுப்பணிந்து, கச்சம் போட்டு இறுக்கிக்கட்டியிருந்தார்கள். பெண்மணிகள் ஜரிகை போடப் பட்ட துல்லியமான தூய வெண் ஆடையை அணிந்து கொண்டிருந்ததுடன், சிற்சில ஆபரணங்களையும் அணிந்திருந்தார்கள். ஆண் பெண் இருபாலரும் தங்கள் தங்கள் கால் களில் பாதரட்சைகளை யணிந்திருந்தார்கள்.

அவர்களுடைய உயரத்திற்கேற்ற பருமனும் சிவந்த அழகான உருண்டை முகமும், பிரகாசம் பொருந்திய பெரிய கண்களும், கோவைக் கனியை நிகர்த்த அதரமும், கள்ளங் கபடு அற்ற மிகப் பொலிவான முகமும் அவர்களுடைய வசிகரித்தன்மையைப் பன் மடங்கு அதிகப் படுத்தின. அக்கட்டிடத்தினின்று புறப்பட்ட அக் குள்ளர்கள் நேரே அம்மைதானத்திற்குச் சென்று அங்கு போடப் பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் மஞ்சளும் வெண்மை நிறமுங்கலந்த ஆடைகளை உடுத்தியிருந்த கம்பீரமான தோற்றமும் கூறியவிழிகளும் அமையப் பெற்ற குள்ளர்கள் பதின்மர் நேரே அக் கூட்டத்தினரிடையில் புகுந்து மேடை மீதேறி தத்தமக்குரிய ஆசனங்களில் போய் அமர்ந்தார்கள். சிறிது நேரம் வரையில் எங்கும் நிசப்தம் நிலவியது.

மேடை மீதமர்ந்திருந்த பதின்மரில் தலைவராகக் காணப்பட்ட ஒரு குள்ளரின் அபிப்பிராயத்துக்கிணங்க இருவர் வெளிச்சென்று சுமார் 18- வயது மதிக்கத்தக்க ஒரு யுவதி

யை மிக்க பந்தோபஸ்துடன் அழைத்து வந்தார்கள். அப் பெண்மணி சுமார் 3 அடி உயரத்திற்கு மேலில்லாமலிருந்த போதிலும் அவ்வுயரத்துக்குத்தக்கின அளவில் அவள் தேகம் சட்டுமேஸ்தாய் சந்தத்தில் கடைந்தெடுத்த சித்திரப் பதுமை போல் விளங்கினாள். அவ்வெழில் மடந்தையின் முகம் பூர்ணசந்திரனை நிகர்த்து கண்டோர் காமுறத்தக்க அதிரூப சௌந்தரியம் வாய்ந்தவளாக இருந்தாள். அவளுடைய கூறிய விழிகள் அவளது அதி புத்திசாலித்தனத்தை விளக்கியதுடன் கள்ளங்கபடற்ற நிஷ்களங்கமான இருதயத்தையுமுடையவள் என்பதையும் எடுத்துக்காட்டியது. ஆனால் அவளது முகத் தோற்றத்திலிருந்து ஏதோ சொல்லமுடியாத விசனத்தால் பீடிக்கப்பட்டு அனுபவித்துக்கொண்டு வருகிறாள் என்பது மட்டும் விளங்கியது. அம் மடமயிலாள் மேடை மீதேறி தனக்கெனத் தனித்து போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். அவளது மிகமிஞ்சிய மனோசங்கடத்தால் அவளது மார்பகம் விம்மி விம்மித்தணிந்தது. அப் பெண் மணி அவ்வுன்னதமான ஆஸனத்தில் அமர்ந்திருந்ததிலிருந்து அவள் தகுந்த யோக்கியதாம்சம் வாய்ந்தவளென்பதைப்பற்றி சந்தேகிக்க இடமில்லாமலிருந்தது. ஆனால் அவள் ஆஸனத்தைத்தனித்து ஒரு ஓரமாக போடப்பட்டிருந்த காரணமும், அவள் விசனமே வடிவமாக உட்கார்ந்திருந்ததின் விவரமுந் தான் அறிந்துசொல்லக் கூடாமலிருந்தது. மேலும் அவர்களுடைய பாஷையே இதுவரை கேள்விப்படாத புதிய பாஷையாக இருந்தது.

குள்ளர்கள் எல்லோரும் ஆங்காங்கு அவரவர் இடங்களில் அமர்ந்தபின்பு தங்களுக்கு முன்பு மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த பழவகைகளை மிகக் குதூகலத்துடன் புசிக்கத்தொடங்கினார்கள். ஆனால் அம் மேடை மீது அமர்ந்திருந்த பெண்மணிமட்டும் தனக்கு முன் வைக்கப்பட்டிருந்த பழ வகைகளைத் திரும்பிக்கூட பார்க்க விருப்பமில்லாதவளாக விசனமே உருவாகக்கொண்டு தலை குனிந்த வண்ணம் இருந்தாள். எல்லோரும் புசித்துக் கொண்டிருக்கையில் அம் மாது சிரோன்மணி மட்டும் அக் கனிவர்க்கங்களில் ஒரு துண்டத்தைக் கூட வாயில் போட்டுக்கொள்ளாமலிருப்பதைக்கண்ட இரு குள்ளர்கள் அவள் சமீபம் சென்று, அப் பழவகைகளைக்காட்டிப் புசிக்கும்படியாக அவர்களது பாஷையில் வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் எவ்வளவோ கூறியும் அவள் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அதற்கு மேல் அவர்கள் இயாதொன்றும் செய்ய இயலாதவர்களாய் தங்கள் தங்கள் இடத்திற்குச் சென்றமர்ந்தனர்.

எல்லோரும் புசித்தெழுந்ததும் மேற்படி பெண்மணியை ஒரு மேடை மீது நிறுத்தி அவளைக் குறித்து பலவித விசாரணைகள் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள்வார்த்தைகளிலிருந்து அப் பெண் பெயர் குமுதா என்று தெரிய வந்தது. மேடைமீதமர்ந்திருந்த ஒரு குள்ளர் அப் பெண்மணியைப்பார்த்து சில விஷயங்களைக் கூறினார். அதற்கு உத்திரமாக அம்மடவன்னம் மட்டற்ற விசனத்தோடு அவளது கருவிழிகளில் கண்ணீர் ததும்ப மறுமொழி புகன்றாள்.

அவளுடைய மொழிகள் அவர்கள் எவரையும் திருப்திப் படுத்தியதாகத்தெரியவில்லை. மேலும் அப்பெண்மணிக்குபரி ந்துபேசுபவர்கள் எவரையும்காணப்படவுமில்லை. அங்குநடை பெற்ற சம்பவங்களிலிருந்து அப் பெண்மணி ஏதோ செய்யத் தகாத குற்றம் செய்திருக்கிறுள் என்பதும் அதை விசாரிக் கவே அவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருக்கின்றது என் பதும் நன்கு விளங்கியது. ஆனுல் விசாரணைக்கு முன்பு ஏன் எல்லோரும் பழவர்க்கங்கள் உண்டார்கள் என்பது தான் விளங்கவில்லை.

நீண்டநேர விசாரணையின் பேரில் அம்மேடை மீதமர்ந் திருந்த பதின்மரும் தீர்ப்பு கூறினுர்கள். அத் தீர்ப்பைக் கேட்டதும் அப் பெண்மணி நடுக்குற்று கண்களில் கண்ணீர் பெருகச்சடேரென மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். அவள் விழுந்தது தான்தாமதம். இரு குள்ளர்கள் அவளிடம் விரை ந்து சென்று முகத்தில் தண்ணீர் தெளித்து மூர்ச்சையைத் தெளிவித்தனர். அப்பெண்மணி கீழே மூர்ச்சித்து விழுந்தது, அக்குள்ளர்களுக்கு சிறிது வருத்தத்தைக் கொடுத்ததாயினும், மேற்படி சம்பவத்தை அதி சீக்கிரத்தில் மறந்தவர்களாய் குதித்து விளையாடிக் கொண்டும் பாடிக்கொண்டுமிருந்தார்கள்.

மேலும் அரைமணி நேரஞ் சென்றது. குள்ளர்கள் எல்லோரும் பெருத்த ஆரவாரத்தோடு தங்கள் தங்கள் இடத் திலிருந்து எழுந்து சந்தோஷமாகப் பேசிய வண்ணம் வரிசை வரிசையாக அம் மைதானத்திலிருந்து கிழபுரம் நோக்கிப் புறப்பட்டார்கள். சுமார் ஒரு மைல் தூரஞ் சென்றதும்

அவர்களுக்கு எதிர்ப்புறம் ஒரு பெரியகிணறு தென்பட்டது. அப்பெரிய கிணற்றைச் சுற்றிலும் கற்சுவர் கட்டப்பட்டு அதற்குள் இறங்க ஓர் ஏணியையும் வைத்திருந்தார்கள். அக்கிணற்றிலிருந்து ஜலம் எடுக்கக்கூடிய விதத்தில் இயாதொரு உருளையும் போடப்படாமலிருந்தது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. அக்கிணருனது மிகுந்த ஆழம் உள்ளதாய் அதில் ஜலம் இருக்கின்றதோ இல்லையோவென சந்தேகப்படுந்தன்மையில் இருந்தது. அக்கிணற்றைச் சுற்றி ஏராளமான புதர்களும் செடி கொடிகளும் நிறைந்து செழித்து வளர்ந்திருந்ததிலிருந்து அவ்விடத்தில் ஜனநடமாட்டம் அதிகமில்லையென்பதைத் தெளிவுபடுத்தியதுடன் அது ஓர் பாழடைந்த கிணருக இருக்கலாம் என்ற சம்சயத்தையும் உண்டாக்கியது.

கிணற்றைச் சமீபித்ததும் அக்குள்ளர்கள் எல்லோரும் அதைச்சுற்றிலும் வரிசையாக நின்றுகொண்டார்கள். மேடைமீதமர்ந்திருந்த பதின்மரும் இருகுள்ளர்களை அழைத்து அவர்களது செவியில் மிக ரகசியமாக சில மொழிகளைக் கூறினுர்கள். உடனே இருவரும் குற்றவாளியாகிய அப்பெண் மணியை அக்கிணற்றின் சமீபம் அழைத்து வந்தார்கள். அப்பெண்மணி தன்மனதைத்திடப்படுத்திக்கொண்டு சற்றும் அஞ்சாமல் அவ்விடத்தைச் சமீபித்தாள். சுருக்குப்போடப்பட்ட இரண்டு மணிக்கயிறுகள் உடனே கொண்டுவரப் பட்டன. எவ்வளவோ திடச்சித்தத்துடன் இருந்தும் அக் கிணற்றைச் சமீபித்ததும் அவளது உடல் நடுநடுங்கி உள்ளம் சோர்ந்து மயங்கிக் கீழே விழுந்தாள். அவள் முகத்தில் சிறிது

ஜலந் தெளித்து சற்று ஆஸ்வாசப் படுத்தியதும் கண் விழித் தெழுந்தாள்.

அவ்வம்பலயின் இருபுறத்திலுமாக சுருக்கிடப்பட்ட இரண்டு கயிறுகளை இடுப்பில் இறுக்கிக்கட்டி மெதுவாக கிணற்றின் பக்கம் கொண்டு சென்றார்கள். கிணற்றைச் சமீபிக்கவே அம் மங்கைக்குத்தன்னையறியாமல் உதறல்எடுத் துக் கொண்டது. தன்னுடைய பரிதாப நிலைமைக்கு மனம் வருந்திக் கண்ணீர் விட்டாள் அத்துர்ப்பாக்கிய நிலைமையில் தன்னை எவரேனும் காப்பவருளரோ எனத்தன்னைச்சுற்றிலும் சூழ்ந்து நிற்கும் குள்ளர்களைப் பார்த்தாள். அவர்கள் யாவரும் மிகக் குதூகலத்துடன் சம்பாஷித்துக் கொண்டு தன்னையே வேடிக்கையாக கவனித்துக்கொண்டு இருப்பதைக் காணவே, அவள் தனக்கு இப்புவியில் அநாதைஇரட்சகரான கடவுளைத்தவிர வேறு கதியில்லை யெனத் தீர்மானித்தவளாய் தன்கரங்களைக் கூப்பி கடவுளை வேண்டிக் கொண்டாள். மேலும் 5 நிமிஷநேரமாயிற்று. குள்ளர்கள் இருவரும் நேர மாவதைத் தெரிவிக்கும் பாவனையாக அவளது உடலில் கட்டியிருக்கும் கயிற்றைப்பிடித்து இழுத்தார்கள். அவர்கள் என்ன இழுத்தும் அதை உணராதவளாய் பகவத் தியான த்தில் மூழ்கியிருந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அக்குள்ளர்கள் அவளை அக் கிணற்றின் பக்கத்தில் அழைத்துச் சென்று, திடீரெனத் தூக்கி கிணற்றில் எறிந்தனர். ஆனால் அவர்கள் அவள் இடுப் பில் கட்டியிருந்த கயிற்றை மாத்திரம் விடவில்லை. சற்றும் எதிர்பாராவிதமாக கிணற்றில் வீசியெறியப்படவே அம்மாது

திடுக்கிட்டு திப்பிரமையடைந்து தன்னையுமறியாமல் "ஓ" வென்றலறினள். மேலும் அவளுடைய பாஷையில் அவளையு மறியாமல் பரிதாபகரமான புலம்பலொன்று கிணற்றுக்குள்ளிருந்து பீறிட்டுக்கொண்டு எழுந்தது. அவளது பரமசங்கடமான ஓலமானது "தன்னைக்காப்பவர் யாருமில்லையா"? உதவி! உதவி!!" என்று வாய்விட்டு அழைப்பது போலிருந்தது.

இச்சம்பவங்களை யெல்லாம் ஓர் புதரின் மறைவிலிருந்து இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டு இருந்த ஓர் உருவம் சடேரெனக் கிளம்பி அக்குள்ளர்கள் மத்தியில் பாய்ந்து வந்தது. சுமார் 6 அடி உயரமும் அதற்கேற்ற பருமனும் அழகும், அமையப் பெற்ற மடந்தை யொருத்தி எதிர் பாரா விதத்தில் ஆவேசம் வந்தவளைப் போல் தங்கள் மேல் பாய்ந்து வருவதைக்காணவே அக்குள்ளர்கள் சற்று மனந்திடுக்கிட்டு இரண்டடி பின்வாங்கினர்கள். ஆனல் இரண்டொரு நிமிஷங்களில் மனந்தேறியவர்களாய் எல்லோருமாகச் சேர்ந்து அப் பெண்மணியைப்பிடிக்க சூழ்ந்துகொண்டார்கள்.

மூன்றும் அத்தியாயம்

எதிர்காலத்தின் கோலம்.

கி. பி. 2006ம் வருஷம். அதற்குள் இப்பரந்த பூவுலகில் பல அறிய பெரிய அற்புத சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன.

சென்ற முதல் உலக மகாயுத்தத்தின் விளைவாக வலிய தேசங்களுக்கு உற்ற துணையாக இருந்து, அரும் பெரும் உதவி செய்து வந்த சர்வதேச சங்கம் என்னும் பாதுகாப்புச் சபையானது இருந்த இடந்தெரியாமல் மறைந்துபோயிற்று. அவ்வியுத்தத்தில் கணக்கற்ற ராஜதந்திரிகள் தோன்றி, மாண்டு மண்ணாய்ப்போயினர். கோடிக்கணக்கான விருத்தர், பாலர் ஸ்திரிகள், சிசுக்கள் முதலியோர் மேற்படி யுத்தத்தில் ஈடுபடாமலிருந்தும் அநித விஷப்புகையின் காரணம் இம்மண்ணுலக வாழ்க்கையைத் துறந்து விண்ணுலகடையும் பேற்றைப் பெற்றனர். நிரபராதி தேசங்கள் எல்லாம் யுத்தத்தில் வலுவில் இழுக்கப்பட்டனர். உலகமெங்கும் ஒரே அழுகுரல். எங்கும் ஒரே பிணக்காடு. பஞ்சமும் நோயும் எங்கும் தலைவிரித்தாடின. "நாளை நாம் உயிருடனிருப்போம்" என்ற நம்பிக்கை ஜனங்களின் மனதினின்று விடுபட்டுப்போய், எப்போது மரணம் வரப்போகிறதோ என சாவை எதிர்நோக்கியவண்ணம் பயப்பிராந்தியடைந்தவர்களாய் இருந்தனர். நீண்டகால யுத்தத்தின் பேரில் சகல தேசங்களும் பலஹீனமடைந்து மேலும் போராட சக்தியின்றி யுத்தம் நின்றுபோயிற்று. அவ்வியுத்தத்தின் பயனாக பல சிறிய தேசங்கள் சிதறுண்டு இருந்த இடந்தெரியாமல் அழிந்துபோயின. தோற்பு கெலிப்பென்பதே தெரியவில்லை. தேசங்கள் ஒவ்வொன்றும் தத்தம் மட்டில் தோற்று உருவழிந்து போனதாகத் தான் தோன்றியது. இந்தியநாடும் வலுக்கட்டாயமாக அவ்வியுத்தத்தில் சேரும்படி நேர்ந்தது. காங்கிரஸ் மகாசபையின் தீவிரக்கிளர்ச்சியின் பேரில் பெரும்பான்மையான பாரதமக்கள் அவ்வியுத்

தத்தில் கலந்துகொள்ளவில்லை. எனினும் அவ்வதர்ம யுத்தத்தின் பயனாக லட்சக்கணக்கான பாரதமக்கள் அநியாயமாக உயிரிழக்கும்படி நேர்ந்தது. முடிவாகக்கூறப்போனால் அந்த யுத்தமானது மக்களின் வாழ்வையே குலைக்கவந்த ஓர் பெருந்தடைக்கல்லாக விளங்கியது.

அவ்வியுத்தத்தின் படிப்பினையாகஇந்தியமக்களனைவரும் ஒருங்கே காங்கிரஸில் சேர்ந்து அதை ஒரு தெய்வீக ஸ்தாபனமாக்கினர். சகல தேசங்களும் பலஹீனமடைந்து திணறிக்கொண்டிருக்கையில் இந்தியாவின் தேசியகோஷம் வானைப்பிளந்தது. சமூகம், ராஜீயம் முதலிய பலவிஷயங்களிலும் இந்தியர் மேம்பாடடைந்து விளங்கினர். நாளுக்கு நாள் சுதந்திரதாகம் மேலிட்டு, தாங்கமாட்டாமல் தவித்தனர். இந்திய வீரத்தவப்புதல்வர்கள் முன், பிரிட்டிஷ் சிங்கம் தலை குனிந்து முழங்கால் மண்டியிடும்படி நேர்ந்துவிட்டது. எங்கும் ஒரே ஜெயகோஷம், எங்கும்வெற்றிமுரசு முழங்கின. சுதந்திரப்பேற்றைப்பெற்ற பாரதமக்கள் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினர்.

"ஆடுவோமே—பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று" (ஆ)
பாரதியார்

என்று பாரதமக்கள் ஆடிப்பாடி ஆனந்தமுற்றனர். இந்திய தேசம் விடுதலையடைந்து 16 ஆண்டுகளே ஆகியிருந்தும், அதற்குள் அதி தீவிரமாக ராஜீயம், சமூகம், பொருளாதாரம் முதலியவைகளில் முன்னேற்றமடைந்தனர். ஜாதிவேற்றுமை, மதவேற்றுமை முதலியவைகள் எல்லாம்

அனேகமாக இருந்த இடந்தெரியாமல் மறைந்தன. மக்களுக்குள் உயர்வு, தாழ்வு இல்லே. எல்லோரும் சமம் என்னும் கொள்கை வேரூன்றியது. நல்லோர் பெரியோர் என்னும் வாக்கியம் நிலெபெற்றது. ஆணுக்கொருநீதி பெண்ணுக்கொருநீதி என்பதொழிந்தது. பணக்காரன், ஏழை, முதலாளி, தொழிலாளி என்னும் பதங்களேயே மக்கள் வெறுத்தனர். யாதொரு தொழிலும் செய்யாமல் உண்டு களித்திருப்பவர்களையெல்லாம் நாட்டைப்பிடித்த சனியன்கள் எனக்கூறி வெறுத்து விலக்கினர். தொழில் முறையில் ஏற்றம் தாழ்வு என்ற வித்தியாசத்தைத் தள்ளி எல்லோருக்கும் சரி சமமான ஊதியம் கொடுக்கப்பட்டது. சிறுவர்களுக்கு கட்டாயக்கல்வி போதிக்கப்பட்டதுடன் வாலிபர்களுக்கு ராணுவப்பயிர்ச்சியும் அளிக்கப்பட்டது. பதுப்புதுமைத்தொழிற்சாலேகள் நிறுவப்பட்டு எங்கும் சுபிட்சம் தலே யெடுத்தது. வறுமையென்பதே தலைகாட்டாதொழிந்தது. நல்ல ஆகாரமும், நல்ல உழைப்பும கிடைக்கப்பெற்றதினுல் இந்தியமக்கள் நல்லஉடற்கட்டும் மனேவலிமையையும்பெற்று வீர மக்களாய்த்திகழ்ந்தனர். உலகமகா யுத்தத்தினுல் பெரிதும் பாதிக்கப்பெற்று அழிவுற்றிருந்த இதர நாடுகளும் சிறிது சிறிதாக அதனதன் பழைய பெருமையை அடைந்து வந்தவை. விஞ்ஞான ஆராய்ச்சி, ரசாயன ஆராய்ச்சி முதலியவைகள் தலே தூக்கின. புதுபலம் வரப்பெற்ற அந்த தேசங்களுக்குள் வெறுப்புணர்ச்சி வளர்ந்து வந்தது. நாளடைவில் அது பகையாக முற்றியது. பகை முற்றவே ஒவ்வொரு தேசமும் அதனதன் ஆயுதங்களேப் பெருக்கிக்கொள்ளத் துவக்கின. கி. பி. 2006ம் ஆண்டில் ஒவ்வொரு தேசமும்

யுத்த மனப்பான்மைகொண்டு அதற்கு வேண்டிய நிவிர முஸ்திப்புகள் செய்துகொண்டிருந்தன.

ஒரே சமயத்தில் எதிரிகளை லட்சக்கணக்காக மாய்க்கத் தகுந்த பெரிய பெரிய பீரங்கிகளையும், ஆயிரக்கணக்கான எடையுள்ள பெரிய யுத்தக்கப்பல்களையும் அவைகள் அறியா விதத்தில் திடீரென சமுத்திரத்தில் மூழ்கடிக்கக்கூடிய சக்தி பொருந்திய இயந்திரங்களையும் கண்டு பிடித்தனர். ரசாயன விஞ்ஞான ஆராய்ச்சியின் பலனாக ஒருவிதமான ஒளியையும் ஒலியையும் கண்டு பிடித்தனர். அவ்வொளி எவர் மீதில் பட்டபோதிலும் அந்தக்ஷணமே மரணத்தை விளைவிக்க கூடிய மகா விஷத்தன்மை பொருந்தியது. அதைப்போலவே அம் மாய ஒலியைக்கேட்பவர்களுக்கும் அபாயகரமானமரணத்தை யுண்டாக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருந்தது. எதிரிகளை நின்ற நிலையில் மாய்க்கக்கூடிய மகாபயங்கரமானதும் கொடுந் தன்மை வாய்ந்ததுமான ஆயிரக்கணக்கான யுத்த தளவாடங் களை கண்டு பிடித்ததின் மூலம், மக்களனைவரும் தங்கள் எதிர் கால வாழ்வு எப்படியாகுமோ என அஞ்சி நடுநடுங்கினார்கள். மற்றோர் முறை உலக மகாயுத்தம் நேர்ந்தால் இவ்வுலகில் ஒரு பிராணிகூட உயிருடன் இராது என்பதை சகல ஜனங் களும் நன்கு அறிந்துகொண்டார்கள்.

அச்சமயத்தில் சுயேச்சையடைந்த இந்திய நாடும் தன் யுத்த தளவாடங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாயிற்று. பிறநாடுகளைப்போல் நாடுபிடிக்கும் ஆசையோ, அல்லது பிறநாடுகளின் மேல் பகையோ இல்லா மலிருந்தும், தற்பாதுகாப்பின் நிமித்தம், பெருக்கிக்கொள்ள

வேண்டியது அவசியமாக ஏற்பட்டது. அக்காலத்தில் சந்திரகிரி நகரின் வடபாரிசத்திலுள்ள ஒரு மைதானத்தில் உலகத்திலேயே மிகப் பெரியது எனக் கருதப்பட்ட கண்காட்சி சாலையொன்று வந்து தங்கியிருந்தது. அக் கண்காட்சியானது ஜப்பானிய தேசத்திய மிகப் பிரபல தனிகரான கோட்டா என்பவரால் நடத்தப்பட்டுவந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோரும் அக் காட்சிசாலைக்குள் சென்று கண்டு களித்தனர். அக் காட்சிசாலையில் இரண்டடி உயரமுள்ள குள்ளர், முதல் எழு அடி உயரமுள்ள நெட்டையன், மூன்று தலையுள்ள மனிதன், வாத்தின் முகத்தையுடைய கோழி, மனிதனைப்போல் நன்றாகப் பேசுந் தன்மை வாய்ந்த குரங்கு, மற்றும் அதிசயமான உருவம் படைத்த மிருகங்கள் பட்சிகள், போன்ற நூற்றுக்கணக்கான அற்புதக்காட்சிகள் இருந்தன. மேலும் உலகத்திலேயே முதன்மைஸ்தானம் பெற்றஅழகிகள், சகலநாடுகளினுடையசங்கிதத்திலும்தேர்ச்சி பெற்ற பாடகர்கள், அதிநூதன நடனங்கள் அறிந்த நடிகள் போன்ரேர் கண்காட்சியைக்காண வருவோர்களின் மனதைக் கவர்ந்தனர். இக்காட்சியானது வட இந்தியாவிலுள்ள பல முக்கியமான இடங்களுக்கெல்லாம் சென்று விட்டு, சமீபத்தில் தான் சந்திரகிரிக்கு வந்து சேர்ந்தது.

மேற்படி கண்காட்சி சாலைக்கு சிறிது தூரத்திலுள்ள ஓர் பெரிய பங்களாவில் மேற்படி கண்காட்சி சாலையின் சொந்தக்காரரான கோட்டா என்பவர் வசித்து வந்தார். கண்காட்சியின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்கள் வரை சம்பாதித்தார். அவரிடம் கணக்கற்ற பணியாட்கள்

எந்த நிமிஷத்தில் எக்காரியம் செய்யச்சொல்லப்போ கின்றாரோவென எதிர்பார்த்த வண்ணமிருந்தனர். இவருக்கு ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதரவு அபரிமிதமாக இருந்த படியால், இவருடையஉடைமைகளை ஆயுதந்தரித்த ஜப்பானிய வீரர்கள் பாதுகாத்துவந்தனர். சந்திரகிரிக்கு இக்காட்சிசாலை வந்த சிறிது தினங்களுக்கெல்லாம் மிக்க செல்வாக்கு வாய்ந்த பல உத்தியோகஸ்தர்கள் இவருக்கு நண்பராயினர்.

சந்திரகிரியில் அழகிலும், தனத்திலும் கல்வியறிவிலும் சங்கீதத்திலும் ஒப்புயர்வற்று விளங்கியவள் தவமணி என்னும் பெண்மணியாவாள். அப்பெண்மணியின் அதிரூபலாவண்யத்தையும், சங்கீதத்திறமையையுங் கேள்வியுற்ற கோட்டா என்னும் அத் தனவந்தர் அப் பெண்மணியை எப்படியாவது தனது காட்சிசாலையில் எடுத்துக்கொள்ளவேண்டும் எனத் தீர்மானித்தார். அக்காரியத்தை நிறைவேற்ற வேண்டி மேற்படி மடந்தையின் தமையனை ஞானசிகாமணியை மெதுவாக சிநேகிதமாக்கிக்கொண்டார். ஞானசிகாமணி தன் பெயருக்கு முற்றிலும் நேர் விரோதமாக ஞானசூன்யனாக விளங்கினான். கிடைத்தற்கரிய பெரிய சிநேகிதம் கிடைத்துவிட்டதாகக்கருதி எப்பொழுது பார்த்தாலும் விருந்துகளிலும் வேடிக்கைகளிலும் காலந்தள்ளி வந்தான். சில நாட்களில் தவமணியும் மேற்படி கோட்டாவுக்கு அறிமுகமாக்கி வைக்கப்பட்டாள்.

தவமணி சிறந்த அறிவாளியானதால் கோட்டாவைத் தனக்கு அறிமுகமாக்கி வைத்ததைக்குறித்துத் தன் தமை

யனைக் கடிந்து கொண்டதுடன், அடிக்கடி அவரை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டாள். அவ் வார்த்தைகளைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல் ஞானசிகாமணி அவர்பங்களாவுக்குச் செல்வதும் அவரை அழைத்துக்கொண்டு தன்வீட்டுக்கு வருவதுமாகவே யிருந்தான். அச் சந்தர்ப்பங்களில் தவமணி முகத்தில் வெறுப்புத்தோன்ற கடுகடுப்புடன் அவர்களது பார்வையினின்று மறைந்துகொள்வாள். முன் பின் அறிமுகமில்லாத ஒரு ஜப்பானியன் தன் இல்லத்திற்கு வருவதை அவள் சற்றும் விரும்பவில்லை. தவமணியின் பேரழகைக் காணுந்தருண மெல்லாம் கோட்டா மதிமயங்கி கல்லாய்ச்சமைந்து நின்று விடுவான். அவளைக் காணாத சமயத்திலெல்லாம் எப்போது அவளை மீண்டும் காண்போம் என அவன் மனது துடிதுடித்துக் கொண்டேயிருக்கும். தான் எப்பாடுபட்டாவது அவளைத்தனக்குரியவளாக்கிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணங் கொண்டவனாய் அதற்குரிய சந்தர்ப்பங்களை எதிர் நோக்கி யிருந்தான்.

தனது கண்காட்சிசாலையில் ஞானசிகாமணிக்கு 300 ரூபாய் சம்பளத்தில் ஒரு உத்தியோகம் கொடுத்தான். உத்தியோகம் கிடைக்கப்பெற்ற ஞானசிகாமணி தன் தங்கையிடம் சென்று "தவம்! என்னவோ நீ கேவலமாக நினைத்தாயே. அந்தபுண்ணியபுருஷர்கோட்டா எனக்கு ஒரு பெரிய உத்தியோகம் கொடுத்திருக்கிறார். தாய் தந்தைகளற்ற நமது குடும்பத்தில் அவர் வைத்திருக்கும் வாத்ஸல்யத்தையறியா

மல் எப்போது பார்த்தாலும் கடுகடுவென்றிருக்கிறாயே! இது நியாயமா''? என்றான்.

தவம்:—"அண்ணா! தாங்கள் வெளுத்தது எல்லாம் பால். கருத்ததெல்லாம் தண்ணீர் என்றிருக்கிறீர்களே. முன் பின் அறிமுகமில்லாத ஒருமனிதன் உங்களுக்கு ஓர் உயர்ந்த உத்தியோகம் கொடுத்ததிலிருந்தே அம் மனிதன் தகுந்த காரணமின்றி அவ்வுத்தியோகத்தைக் கொடுக்கமாட்டான் என்பதை அறிந்துகொண்டிருக்கலாமே, போகட்டும், அவர் அவ்வுத்தியோகத்தைக்கொடுத்து உங்களை ஏற்றுக்கொள்ளும் படி சொன்னதும் நீங்கள் ஏற்றுக்கொண்டதும் எனக்கு சுத்தமாய் பிடிக்கவேயில்லை. நம்முடைய தொழில்கள் எவ்வளவோ கவனிப்பாரற்று இருக்கின்றன. அவைகளைச் செய்வதற்கே நமக்கு நேரம் போதாதே. ஏன் வீணில் அதை ஏற்றுக்கொண்டீர்கள்?"

ஞானம்:—"இக் கண்காட்சியோடு பல நாடுகளையும் சுற்றி வரமிகுந்த சௌகரியம் ஏற்படுமென்றேதான் இதில் சேர்ந்தேனே ஒழிய வேறில்லை. கோட்டா அவர்களும் தம் முடன் கூட என்னை வரும்படி வற்புறுத்தியழைத்திருக்கிறார். அதன் நிமித்தமாகத் தான் அவ்வுத்தியோகமும் கொடுத் திருக்கிறார்'' என்றான்.

தன் தமையன் மொழிகளைக்கேட்டதும் சிறிது நேரம் வரை சிந்தனை செய்து பார்த்தாள். "ஜப்பானியராய் இருந் தால் என்ன. அவருடைய ஹிருதயம் பரிசுத்தமானதாக இருந்தாலும் இருக்கலாம். சுயநலம் ஏதுமின்றி உபகார

மூம் செய்யலாமல்லவா. அவரோ பெருத்த தனிகர். பிறரிடம் எதிர்பார்க்கக்கூடியது என்ன இருக்கிறது. ஒருவருடைய குணங்களை முற்றிலும் அறிந்துகொள்ளாமல் சந்தேகிப்பது தவறுதான்" எனத் தனக்குள் கூறிக்கொண்டாள். அவர்மேல் இருந்த அவளுடைய வெறுப்பானது கொஞ்சங் கொஞ்சமாக விலகியது. கோட்டா தன் வீட்டுக்கு வருங் காலத்தில் கூட தன் வெறுப்பைக் காட்டிக்கொள்ளாமல் சகஜமாக பேசி வந்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல தவமணியின் வெறுப்பு மாறி வந்தது. ஒருநாள் காலை கோட்டா, தவமணி, ஞானசிகாமணி மூவரும் மிகக் குதூகலமாக பல விஷயங்களைக்குறித்து வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள். அது சமயம் சங்கீதத்தைப்பற்றிய பேச்சு வந்தது. கோட்டா, தவமணியைப் பார்த்து "அம்மணி! என்னுடைய கண்காட்சிசாலையில் இருக்கும் பெண்மணிகளுக்கு தென்னிந்திய சங்கீதம் பயிலுவிக்க வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. அது விஷயத்தில் தங்கள் உதவியைத்தான் நாடியிருக்கிறேன். தங்கள் சிரமத்திற்குத்தக்கின பிரதி பிரயோஜனம் செய்து விடுகிறேன்" என்று கூறினர். "அது விஷயம் பற்றி யோஜனை செய்து கூறுகிறேன்" என்ருள் தவமணி.

மேற்படி சம்பவங்கள் நிகழ்ந்த சில நாட்களுக்கெல்லாம் தவமணி தன் தமையனுடன் கோட்டாவின் பங்களாவிற்குச் சென்று தன்னிடம் சங்கீதம் கற்றுக்கொள்ள ஏற்படுத்தியிருக்கும் பெண்மணிகளைப் போய்ப்பார்த்தாள். மிக்க வனப்புவாய்ந்த அப் பெண்மணிகள் தன்னிடம் நடந்து

கொள்ளும் மாதிரியைக்கண்டதும் தவமணிக்கு அவர்கள் மேல் அவளையறியாமல் அன்பு உண்டாயிற்று. அப் பெண் மணிகளுக்கு சகலபாஷைகளிலும பாண்டித்தியமிருந்தது.

தவமணிக்கு அப்பெண்மணிகளுடன் பேசிக்கொண் டிருப்பது மிக உத்ஸாகமாக இருந்தது. அன்று தான் வந்து வெகுநேரமாயிற்றென விடைபெற்றுக்கொண்டு தன் இல்லத் தையடைந்தாள். நாட்கள் செல்லச்செல்ல தவமணி அடிக்கடி அப்பங்களாவிற்குச்சென்று அம் மடந்தையர்களைக் கண்டு பேசிவருவாள். எப்படியாவது தவமணி தனது பங்களாவுக்கு வந்தால் போதும் என்றிருக்கும் கோட்டா, தவமணியிடம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கும்படி அப்பெண்மணி களுக்கு ஏற்கனவே கட்டளையிட்டிருந்தான்.

அப்பெண் அணங்குகளில் வட இந்தியாவைச் சேர்ந்த தாராபாய் என்பவளிடம் தவமணிக்கு மிகுந்த பிரேமை ஏற் பட்டது. இருவருமாகக் குதூகலமாகப் பேசிக்கொண்டே யிருப்பார்கள். பார்வைக்கு என்ன சந்தோஷமாக இருந்தும் தாராபாயின் மனதில் வருத்தத்தின் சின்னமிருப்பதை தவ மணி அறிந்துகொண்டாள். அவளது மனவருத்தத்தின் அடிப்படையான காரணத்தைத் தன்னிடம் உரைத்தால் தன்னால் இயன்றவளவு உதவி செய்வதாகக் கூறினாள். தாராபாய் தனக்கு மனவருத்தம் ஒன்றுமில்லை என்று எவ்வளவோ மறுத்துக்கூறியும் தவமணி விடவில்லை. அதன் மேல் மிகுந்த பயத்தோடு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே தவமணியின் காதில் சில மொழிகளைக் கூறி, அதுவிஷயத்தை எவரிடமும் வெளியிடக்கூடாது என்

கூறிக்கொண்டே வந்தவள் மனவருத்தம் தாங்காமல் விம்மி விம்மியழுதாள். அதன் மேல் தவமணி அவளைப்பயப்பட வேண்டாம் எனக்கூறி சமாதானம் செய்தாள்.

பிறகு இருவருமாக மேற்படி பங்களாவின் பின்புறம் சென்ருர்கள். பின்புறத்தையடைந்ததும் ஒரு ஆடவன் கனைக்கும் சப்தம்கேட்டுத்திரும்பிப்பார்த்தார்கள். ஒருவரையும் காணப்படவில்லை. சப்தமோ மிகச் சமீபத்திலிருந்து வருகின்றது என்பது மட்டும் நன்கு விளங்கியது. தான் ரகசியமாக கூறிய விஷயத்தை யாரோ ஒளிந்திருந்து அறிந்து கொண்டிருக்கிருர்கள் என நடு நடுங்கிய தாராபாய் "ஐயோ! தவமணி!! நாம் என்னசெய்வது"? என மெதுவானகுரலில் கூறினள். பக்கத்தில் ஒளிந்து கொள்ளக்கூடிய வசதியான இடம் இல்லாமலிருப்பதையும், ஒரு அறையாவது, அதற்குள் செல்லக்கூடிய வழியாவது இல்லாமலிருக்கையில் இச் சப்தம் எங்கிருந்து வந்திருக்கும் என என்னயோசித்தும் ஒன்றும் புலப்படவில்லை. தாங்கள் நின்றுகொண்டிருக்கும் இடத்திற்குப்பக்கத்தில் இருக்கும் சுவருக்கு மறுபக்கத்தில் ஓர் அறையிருக்குமோ என்ற சம்சயம் தோன்றியது.

அதன்மேல் இருவரும் புறவடைப் புறமாக மேற்படி சுவற்றிற்கு மறுபக்கத்தில் வந்தார்கள். அவ்விடத்தில் ஓர் அறையின் ஜென்னல் மட்டும் தெரிந்தது. கதவு ஒன்றும் தென்படவில்லை. எப்பக்கத்தில் கதவு இருக்கிறது என்பதை நிர்ணயிக்கக்கூட அவர்களுக்கு சாவகாசமில்லை. எப்படியாவது அந்த ஜென்னல் மூலமாக அவ்வறையைக்கட்டாயம் ஒரு முறை பார்த்து விடவேண்டும் எனத்தவமணி நிர்மானி

த்தவளாய் அதன் சமீபம் சென்றாள். மேற்படி ஜன்னலானது கொஞ்சம் உயரத்தில் இருந்தபடியால் பார்க்கமுடியவில்லை. நாற்காலி, மேஜை முதலியவைகளில் எதையாவது போட்டு ஏறிப்பார்க்கலாம் என்றாலும் அதற்கும் வழியில்லாமலிருந்தது. தாங்கள் ஒளிந்திருந்து வேவு பார்ப்பதை கோட்டா கண்டு விட்டால் அத்துடன் தங்களுடைய வாழ்நாள் முடிந்து விட்ட மாதிரி தான் என்பது அவர்களைத் திகிலடையச்செய்தது. கடைசியாக தவமணிக்கு ஓர் யோஜனையுண்டாயிற்று. தாராபாயைக் கீழே குனிந்துகொள்ளும்படி கூறி மெதுவாக அவள் தோள்மேல் தொத்தியேறி, ஜன்னல் கம்பியை கையில் பிடித்துக்கொண்டு மேற்படி அறைக்குள் பார்வையைச் செலுத்தினாள். பார்வையைச் செலுத்தியது தான் தாமதம். “ஆ” வென்று தன்னையுமறியாமல் கூச்சலிடப் போனவள் வாயைச் சரேலென மூடிக்கொண்டாள். அவளது பார்வையில் திகில் நிறைந்திருந்தது. உடல்நடுநடுங்கி வியர்வைஆறாகப்பொழிய திப்பிரமையடைந்த வண்ணம் ஒன்றுஞ்செய்யமாட்டாமல் நின்றுகொண்டேயிருந்தாள்.

அதே சமயம் அவர்கள் சமீபம்; காலடிசப்தம்கேட்டது. தாராபாய்க்கு குலை நடுக்கமுண்டாய் தவமணியை இறங்கும்படி கூறிக்கொண்டே கீழே குனிந்தாள். தங்களுக்குச் சிறிது தூரத்தில் வேற்றாள் ஒருவன் வருவதைக்கண்ட தவமணி “என்ன துன்பம் நேருமோ! யாது விளையுமோ” என எண்ணமிட்டவளாய் ஒரே பாய்ச்சலாக தாராபாயின் முதுகின்மேலிருந்துகீழே குதித்தாள்.

நான்காம் அத்தியாயம்

பிசாசுகளினிடையில் சிங்கம்.

இரக்கமற்ற அப்பெண்மணியின் பேரில் சற்றும் இரக்கங் கொள்ளாமல் அக்குள்ளர்கள் அவளது இடுப்பில் கயிற்றைக் கட்டி கிணற்றில் இறக்கியதல்லாமல், அவள் படும் அவஸ்தை யைக்கண்டு சிறிதும் மனவருத்தமுறாமல் குதூகலமாகப் பார்த்து சிரித்துக்கொண்டிருப்பதைக்காணவே, பாய்ந்து வந்த அப் பெண்மணியின் மனமானது சகிக்கவொண்ணாவேதனை யடைந்து, உடம்பு படபடத்தது. ரௌத்திராகாரமான கோபம் பொங்கியெழுந்தது. அக் கோபத்தினால் பூர்ணச் சந்திரனைப்போன்ற அவளது முகஞ்சிவந்து அவளது அதரங்கள் துடிதுடித்தன. அவளது முகத்தில் வீரலட்சுமி தாண்டவ மாடினாள். 6-அடி உயரமும், அவ்வுயரத்திற்கேற்றபடி உறம்பெற்ற சரீரமும், கலங்கா நெஞ்சமும் வாய்ந்தவளாக இருந்தபடியால், அக் குள்ளர் கூட்டத்தைக் கண்டு சற்றும் அஞ்சாதவளாய், தன்னைச்சூழ்ந்து நின்ற குள்ளர்களை மிக்க ஆவேசத்துடன் கழுத்தில் கைகொடுத்து நெட்டித்தள்ளியது டன், தனது கைகளை வலசாரி, இடசாரியாக வீசிய வண்ணம் தன்னை விட்டு விலகி வெகுதூரஞ்செல்லும்படி அவர்களை வெருட்டி ஓட்டினாள்.

மேற்படி சம்பவங்களையெல்லாம், இமைகொட்டாமல பார்த்துக்கொண்டிருந்த இரு குள்ளர்களும் மேற்படி குமுதாவை கிணற்றிற்குள்ளேயே விட்டு விடலாமா அல்லது

வெளியே இழுத்து விடலாமா என்று ஒன்றையும் நிர்ணயிக்கமுடியாமல் திப்பிரமையடைந்து ஒன்றுஞ் செய்ய இயலாதவர்களாய் நின்றுகொண்டிருந்தார்கள். குள்ளர்கள் தன்னை விட்டு விலகிநின்றதைக்கண்டவுடன், அவ்வீரப்பெண்மணி நேரே கிணற்றினண்டை நின்றுகொண்டிருந்த குள்ளர்கள் சமீபத்தில் பாய்ந்து சென்றாள். தங்களை நோக்கி அப்பெண்மணி பாய்ந்து வருவதைக்கண்டவுடன் இரு குள்ளர்களும் நடுநடுங்கியவர்களாய்க் குமுதாவைக்கட்டியிருந்த கயிறுகளை எட்டி நின்றபடியே அப் பெண்மணியிடம் கொடுத்துவிட்டு தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஓடிவிட்டார்கள். தான் பாய்ந்து வருவதைக்கண்டு பயந்து எங்கு குமுதாவைப்பற்றியிருந்த கயிற்றை கிணற்றிற்குள் விட்டு விடுவார்களோ என்று பெரிதும் பயமடைந்திருந்த அம்மடந்தை, தான் சற்றும் எதிர்பாராவிதத்தில் தனக்குச் சாதகமாக அக் காரியம் முடிவுற்றதைக்கண்டு சந்தோஷமடைந்தவளாய் மெதுவாக அக் கயிற்றைப்பற்றி வெளியே இழுத்தாள். இரண்டொரு நிமிடங்களுக்கெல்லாம் குமுதாவை கிணற்றுக்குள்ளிருந்து வெளியே இழுத்து சமீபத்திலிருந்த புல் தரையின் மேல் படுக்கவைத்தாள். அக் குள்ளர்களால் கிணற்றிற்குள் தள்ளப்பட்ட குமுதா என்னும் அப்பெண்மணி சொல்லொணு பயத்தினால் மூர்ச்சையாய்ப்போனபடியால் தன்னைக் காப்பாற்றி வெளியே புல் வெளியில் படுக்கவைத்த அவ் வீரப்பெண்மணியையாவது, தனக்குச் சிறிது தூரத்தில் பயந்துகொண்டு நிற்கும் அக் குள்ளர்களையாவது அறிந்துகொள்ளக்கூடவில்லை.

முதலில் குமுதாவின் மூர்ச்சையைத் தெளிவிக்க வேண்டியது அவசியமாக இருந்தபடியால், எங்கேயாவது சமீபத்தில் தண்ணீர் கிடைக்குமோ என அப் பெண்மணி சுற்றுமுற்றும் பார்த்தாள். எங்கும் அகப்படவில்லை. சீரெனவெழுந்து கிணற்றை எட்டிப்பார்த்தாள். அக் கிணற்றின் உட்பாகத்தில் இருட்டுகட்டியிருந்தபடியால் ஜலம்இருப்பதையும் இல்லாததையும் அறிந்துகொள்ளக்கூடவில்லை. மேலும் தண்ணீர் இழுப்பதற்கு வேண்டிய வசதியும் காணப்படவில்லை. அதன் மேல் மேற்படி குள்ளர்களைக்கொண்டே தண்ணீர் கொண்டுவரச்சொல்வது தான் உசிதம் எனத் தீர்மானித்தவளாய் அக்குள்ளர்களில் ஒருவனுக்கு ஜாடைகாட்டி குடிப்பதற்கு ஜலம் கொண்டு வரும்படி கூறினாள். அந்த ஜாடையை அறிந்துகொண்ட அக்குள்ளன் ஓடிச்சென்று தண்ணீர்கொண்டுவந்து அப்பெண்மணியின் சமீபத்தில்வைத்தான். அம்மாதரசி உடனே சிறிது நீரை எடுத்து மூர்ச்சையாய்க்கிடந்த குமுதாவின் முகத்தில் தெளித்து தனது புடவைத்தலைப்பினால் விசிறி மூர்ச்சையைத் தெளிவித்தாள். அதற்குள் குள்ளர்கள் கொஞ்சங் கொஞ்சமாகத் தைரியம் வரப்பெற்றவர்களாய் அப்பெண்மணிக்கு மிகச்சமீபத்தில் நெருங்கி நின்று மேற்படி பெண்மணிக்கு மூர்ச்சை தெளிந்ததோ, இல்லையோ என அதி ஆவலுடன் கவனித்தனர். இரண்டு குள்ளர்கள் புன் சிறிப்பு சிறித்தபடி,. மிக பயபக்தி விநயத்துடன் மூர்ச்சை போயிருந்த அப்பெண்மணியின் சமீபத்தில் அமர்ந்து தங்களது கை விசிறியால் விசிறினர்.

நம் விரமடவன்னம் அதற்குள் மூர்ச்சை தெளிந்

தெழுந்த குமுதாவை நோக்கி ஊமைஜாடையில் அவளுக்கு உடம்பு என்னசெய்கிறது என வினவினாள். தனக்கு தாக மதிகமாக இருக்கிறது என்று அப்பெண்மணி ஜாடை காட்டவே சிறிது நீரை எடுத்து அவள் வாயில் வார்த்தாள். அதே சமயத்தில் குமுதா மிகப்பயங்கரமான பார்வையுடன் "ஓ"வென்று பயங்கரமாக சப்தமிட்டாள். அப்பெண்மணியின் சப்தத்தைக்கேட்டு திடுக்கிட்ட நம் வீரச்செல்வி தலை நிமிர்ந்து தன்னைச்சுற்றி ஒருமுறை பார்த்தாள். தன் கழுத்தில் சுருக்கிடப்பட்ட ஒரு மணிக்கயிறு மாட்டப்பட்டிருப்பதும், அக் கயிற்றைப்பற்றி பதின்மர் பிடித்து வலித்து இழுப்பதையும் உடனே அறிந்துகொண்டாள். "ஓஹோ" நம்முயிருக்கும் உலைவைத்து விட்டார்கள் எனக்கூறிக்கொண்டே சரேலெனவெழுந்தாள். அக்குள்ளர்கள் அதிவேகமாகத் தங்கள் பலங்கொண்ட மட்டும் பற்றியிழுத்தபடியால், அவளால் சமாளித்துக்கொண்டு எழுந்திருக்கமுடியவில்லை. சுருக்கு போடப்பட்ட கயிறானதால் அவர்கள் வலித்து இழுக்க இழுக்க சுருக்கானது அவளது கழுத்தில் இறுகிக்கொண்டே வந்தது. கழுத்தில் மாட்டப்பெற்ற சுருக்கைத் தளர்த்திக் கொள்ளும் பொருட்டு தன் பலங்கொண்டமட்டும் கயிற்றை விலக்கிப்பார்த்தும் முடியாமல், அவர்கள் இழுத்த இடங்களுக்கெல்லாம் போகவேண்டி நேரிட்டது. தாங்கள் அடைந்த வெற்றிக்கறிகுறியாக பெருத்த ஆரவாரத்தோடு சப்தமிட்டுக் கொண்டே இழுத்துக்கொண்டு சென்றார்கள். ஆங்காங்கு தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற குள்ளர்களும் மேற்படி சுருக்கிடப்பட்ட கயிற்றை இழுப்பதில் கலந்துகொண்டார்கள்.

மேற்படி சுருக்கானது, நமது வீரப்பெண்மணியின் கழுத்தை இறுக்கி நெறித்தது. அக்குள்ளர்கள் வெகுதூரத்தில் நின்று கொண்டே இழுத்துக்கொண்டு சென்றபடியால் அவர்களை விலக்கித்தள்ளவாவது அடிக்கவாவது முடியவில்லை. சுமார் 40,50 குள்ளர்கள்வரை சேர்ந்து பற்றி இழுக்கையில் ஒரு பெண்பால் என்னசெய்யமுடியும்? மூச்சுவிடமுடியாமல் பிராணாவஸ்தைப்பட்டாள். தரதரவென்று கல்லிலும், மண்ணிலும், மேட்டிலும், பள்ளத்திலும் இழுத்துக்கொண்டு செல்லப்படவே, அவளது உடலெங்கும் புழுதி படிந்து முகத்திலெல்லாம் ரணகாயம் ஏற்பட்டு சகிக்க இயலா வலியால் மூச்சுபேச்சின்றி சவம்போல் இருந்தாள். தனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தருளிய அவ் வீரப்பெண்மணியை, சுத்த பேடித்தனமான தன்மையில் அவள் அறியா விதத்தில் கழுத்தில் சுருக்கைப்போட்டு மாட்டி மண் படிந்த தரையில் இழுத்துச்சென்றதானது குமுதாவின் உள்ளத்தை மிகப்புண்படுத்தியது. அப் பெண்மணியை எப்படியாவது அப் பாதகர்களிடமிருந்து விலக்கிக்கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தினால் ஊக்கப்பட்டவளாய் தனது பாஷையில் ஏதேதோ கடுங்கோபத்துடன் கூறிக்கொண்டே எழுந்தாள். அவள் அன்று முழுவதும் உண்ணாததாலும், அக்குள்ளர்களிடை பட்ட பலவித இம்சைகளினாலும் உடல்தளர்ந்து இருந்தபடியால், எழுந்திருக்கமுடியாமல் கீழே சாய்ந்துவிட்டாள். அவ் வீரப்பெண்மணி கல்லிலும் முள்ளிலும் தரத்தரவென்று இழுத்துச்செல்லப்படுவதைக்கண்டு மனம் பொறாமல் அவள் கண்களில் கண்ணீர் ததும்பியது. அவள் உள்ளமானது பட

படவென்றடித்துக்கொண்டது. அவளது மிதமிஞ்சிய உள்ளக் கிளர்ச்சியால் மயக்கமடைந்து மூர்ச்சையானாள்.

வெகுதூரம் வரை மேற்படி பெண்மணியை இழுத்துச் சென்றதும், அக்குள்ளர்கள் சிறிது நேரம் வரை நின்று மேற்படி பெண்ணின் நிலைமை எம்மாதிரி ஸ்திதியிலிருக்கிறது என்பதைக் கவனித்தார்கள். சுருக்கிட்ட கயிறானது அப்பெண்மணியின் கழுத்தை இறுக்கி ஸ்வாசம் விடமுடியாதவாறு தடை செய்ததாலும், கட்டாந்தரையில் இழுத்துச் சென்றபடியால் உடல் முழுவதும் ரத்தகாயமேற்பட்டு சகிக்க முடியாத மரணவலியை யுண்டாக்கியதாலும் அப்பெண்மணி மூர்ச்சையாய்க் கிடப்பதை அறிந்து சந்தோஷமடைந்தவர்களாய் மேலும் இழுப்பதை விட்டு விட்டு அப்பெண் அணங்கின் சமீபம் சென்றார்கள். கழுத்தில் சுருக்கிடப்பட்ட கயிற்றை மெதுவாக அவிழ்த்து அவளது இடுப்பில் கட்டினார்கள். மெதுவாக மேற்படி பெண்மணியை கிணற்றின் சமீபம் இழுத்துச்சென்று கிணற்றிற்குள் இறக்கினார்கள். கிணற்றிற்குள் அப்பெண்மணி போய்ச்சேர்ந்ததும் அக் கயிற்றையும் அதற்குள் எறிந்து விட்டு மூர்ச்சையாய்க்கிடந்த குமுதாவை எடுத்துக்கொண்டு சந்தோஷ ஆரவாரத்துடன் தங்களது இருப்பிடத்தை நோக்கிச் சென்றார்கள்.

இரண்டுநாட்கள்வரை விசேஷமாக யாதொரு சம்பவங்களும் நடைபெறவில்லை. குமுதா எழுந்திருந்து நடக்க சக்தியற்று படுத்த படுக்கையாகவே இருந்தாள். மூன்றாம் நாள் காலை உடம்பு சற்று சுகப்படவே வெளியில் சென்று உலாவி வந்தாள். அவளுடைய முகமானது பரிதிபெச்

காணாத பங்கஜம் போல் வாட்டமுற்றிருந்தது. அவள் பாழுங்கிணற்றின் சமீபம் நடந்து செல்லுகையில் அவளையறியாமல் அவளது உடல் நடுங்கியது. இரண்டு நாட்களுக்கு முன் நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் ஒன்றின் பின் ஒன்றாய் ஞாபகத்துக்கு வந்தன. அவளையறியாமல் அவள் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. தன்னை ரட்சிக்க வந்த அவ் வீரப்பெண்மணிக்கு இழைத்த பாதகச் செயல்களுக்காக அக்குள்ளர்களை மனதாரச் சபித்தாள். இவள் மனம் பொறாமல் திட்டிக்கொண்டிருக்கையில் ஓர் குள்ளன் அதைக் கேட்டுக்கொண்டே அவள் பின்புறம் வந்தான். தங்கள் கூட்டத்தினளாயிருந்தும், அவள் தங்களைச் சபிப்பதைக்கண்டு மனம் பொறாமல், அவள் முகத்தில் ஓங்கி ஓர் அறைவிட்டான். சற்றும் எதிர்பாராவிதத்தில் முகத்தில் ஓர் அடி விழவே, ஒன்றும் அறியமாட்டாமல் வீறிட்டலறிய வண்ணம் நிலத்தில் சாய்ந்தாள். அப்பெண்மணியின் கூக்குரல் கேட்டு மேலும் 4, 5, குள்ளர்கள் வரை அங்கு வந்து என்ன விசேஷமென விசாரித்தார்கள். குமுதாவை அடித்த குள்ளன் நடந்த விஷயங்களை உரைத்தான். தங்களைத் தூஷிக்கும் அப் பெண்மேல் அக்குள்ளர்கள் அடங்காக்கோபங்கொண்டவர்களாய், அவள் நிலத்தில் பலனற்று சாய்ந்து இருப்பதைக் கூட கவனியாமல் அடிக்கவும் காலால் உதைக்கவும் தொடங்கினார்கள்.

ஆனால் அதே சமயத்தில் கம்பீரமான உருவம்படைத்த ஓர் வாலிபன் "அடே! பயல்களா!! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!!" என அதட்டிக் கூறியவண்ணம் அவ்விடத்தை வந்து


அடைந்தான். மேற்படி வாலிபன் கூறும் மொழிகளின் பொருள் ஒன்றும் அக்குள்ளர்களுக்கு விளங்கவில்லை. யார் கூச்சலிடுகிறார்கள் எனத்திரும்பிப்பார்த்தார்கள். தங்களைப் போல் இரட்டிப்பு உயரமும், கட்டமைந்த சரீரமும், வீர உணர்ச்சி நிறைந்த பார்வையும் பெற்ற ஓர் வாலிபன் தங்களை நோக்கி மிகுந்த கோபத்துடன் வருவதைக்கண்டு, என்ன காரணமாக இருக்கலாம் என்பதை அறியும் பொருட்டு பேசாமல் நின்று கொண்டிருந்தார்கள்.

அவ் வாலிபன் குள்ளர்களைச் சமீபித்ததும் அவர்களை தூரச்செல்லும்படி சைகை செய்யவே, அவர்கள் மறுமொழி ஒன்றுங் கூறாமல் தூர விலகிக்கொண்டார்கள். கீழே விழுந்திருந்த குமுதாவை மேற்படி வாலிபன் மெதுவாக எடுத்துத் தன் மடிமேல் விட்டுக்கொண்டு மெதுவாகக் களைப்பையாற்றினன். அப்போதே கண்விழித்த குமுதா தன்னைச் சுற்றியிருந்த குள்ளர்கள் யாவரும் போய்விட்டதையும் தான் ஒரு ஆடவன் மடியில் சயனித்துக்கொண்டிருப்பதையும் கண்டு சிறிது இலஜ்ஜையடைந்தவளாய், மெதுவாக எழுந்தாள். எழுந்திருக்க முடியாமல் அவன் மடியிலேயே சாய்ந்தாள். சிறிது நேரஞ் சென்றது. வாலிபன் அப் பெண்மணியை எடுத்துகுழந்தையைப்போலத்தன் தோள்மேல் சாற்றிக் கொண்டு மெதுவாகநடக்கவாரம்பித்தான். அப்பெண்மணியின் திக்கற்ற நிலைமையானது அவள்மேல் அவனுக்கு இரக்கத்தை யுண்டாக்கியது. அவ்வாலிபனுடைய கம்பீரமான தோற்றத்தையும் பெருத்த சரீரத்தையையும் கண்ட குள்ளர்கள் அவனருகில் கூட நெருங்கத்தைரியப்படவில்லை. வழி நடந்து

செல்லும்போதே அவனுடைய மனமானது சிந்தனுவஸ்தை யில் மூழ்கியது. இப்புது உலகம், இதில் வசிக்கும் குள்ளர் களின் தோற்றம், பழக்க வழக்கங்கள்எல்லாம் அவனுடைய ஆச்சரியத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்தின. "என்ன ஆச்சரியம், கடந்த 3000 வருடங்களுக்குள் மக்களின் வாழ்க் கையானது எவ்வளவு துரிதமாக மாறுதலடைந்திருக்கின் றன. உருவத்திலோ முன்னதில் பாதி, அறிவு ஆராய்ச்சி யிலோ பூஜ்யம், சுபாபமோ மிகவும் பயந்ததும், கோழைத் தனமானதும்; ஆனால் வாழ்க்கையில் சந்தோஷமும் சந்துஷ்டியும் நிறைந்திருக்கின்றன. எங்கும் ஆண் பெண் சமத்துவம் மலிந்து இருக்கிறது. யந்திர ஆட்சி ஒடுங்கிவிட்டது" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

சிறிது தூரம் சென்றதும் தன் தோள்மேல் சாற்றியிருந்த குமுதாவை எடுத்து பக்கத்திலிருந்த புல்தரையில் படுக்க வைத்தான். தன்னை இவ்வளவு தூரம் ஆதரவுடன் இரட்சித்துக்காத்த அவ்வாலிபனுக்குத்தன் கண்களின் மூலம் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டாள். சிறிது நேரஞ் சென்றதும் குமுதா மெதுவாக எழுந்து மேற்படி வாலிபன் கரத்தைப் பற்றி மெதுவாக அழைத்துக்கொண்டு தான் வசிக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றாள் வழியில் குள்ளர்கள் பலர் அவர்கள் மேல்வைத்த விழியை எடுக்காமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்த வண்ணமிருந்தார்கள். தன்னிருப்பிடத்தை யடைந்ததும் குமுதா அவ்வாலிபனைப் பற்றி யிருந்த கரத்தை விட்டு விட்டு உள்ளே சென்று ஒரு தட்டில் சிலபழவகைகளை எடுத்துக் கொண்டுவந்து அவனி

டம் நீட்டி புசிக்கும்படி ஜாடை செய்தாள். அவளது விருப்பத்தையறிந்துகொண்ட அவ் வாலிபன் அவைகளைப் பெற்று



சிலவற்றைத் தின்றுவிட்டு மற்றவைகளை அவளிடமே கொடுத்து விட்டு தனக்கு போரும் என்பதற்கறிகுறியாக ஜாடை செய்தான்.

மேற்படி சம்பவங்களையெல்லாம் வெகு தூரத்தில்

நின்று வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த குள்ளர்கள் மெதுவாக மேற்படி வாலிபனைச் சமீபித்தார்கள். பிறகு புன்சிரிப்புடன் தங்களது பாஷையில் ஏதேதோ பேசினர்கள். அக் குள்ளர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது ஒன்றும் அவ் வாலிபனுக்கு விளங்கவில்லை. "என்ன பேசுகிறீர்கள்! உங்கள் பாஷை எனக்குத்தெரியவில்லை" என்பதற்கு அடையாளமாக ஜாடைகள் செய்தான். அவ்வார்த்தைகளை அவர்கள் அறிந்துகொள்ள முடியாமல் பேசாமலிருந்தார்கள். ஒரு குள்ளன் அவ் வாலிபன் சமீபம் நெருங்கித் தன் கைகளால் மேற்படி வாலிபனைத் தொட்டுப்பார்த்தான். அக் குள்ளனைப்போலவே மற்றவர்களும் அவனுடைய கைகால்களை ஸ்பரிசித்துப்பார்த்து தங்களுக்குள் பல விதமாக சம்பாஷித்துக்கொண்டார்கள். அவர்கள் ஏன் தன்னைத் தொட்டுப்பார்த்தார்கள் என்பதையாவது, என்ன பேசிக்கொண்டார்கள் என்பதையாவது அவ் வாலிபன் அறிந்துகொள்ளக்கூடவில்லை. எல்லா குள்ளர்களும் அவனை ஸ்பரிசித்தும்பார்த்தவுடன் "போய்வருகிறோம்" என்பதற்கறிகுறியாக புன்சிரிப்புடன் சென்று விட்டார்கள். இக் குள்ளர்கள் சென்றதும் மற்றோர் சாரார் அவ் வாலிபனிடம் நெருங்கி முன்னவர்களைப்போலவே அவனைத்தொட்டுப்பார்த்து அதிஆச்சர்யத்துடன் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். ஒரு குள்ளன் ஓடோடியும் சென்று சில பழவர்க்கங்களைக் கொண்டுவந்து மேற்படி வாலிபனிடம் நீட்டி புசிக்கும்படி குறிப்பாகத் தெரிவித்தான். வாலிபன் வேண்டாம் எனமறுக்கவே அக் குள்ளர்கள் எல்லோரும் புன்சிரிப்புடன் முன்னவர்களைப்போலவே சென்றுவிட்டார்கள். இவர்களைப்போலவே

ஒவ்வொரு சாமாராகத் தன்னிடம் வந்து போனது அவனது ஆச்சரியத்தை அளவிலடங்காததாகச் செய்தது.

குமுதா என்னும் அப்பெண்மணியிடம் அவ்விஷயத்தைப்பற்றிக்கேட்டான். அவ்வாலிபனுடைய குறிப்பை அவளால் உணர்ந்துகொள்ளக் கூடவில்லை. "நம்முடைய தோற்றமானது அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்க வேண்டும் அல்லது கதைகளில் நாம் படித்திருப்பது போல அவர்கள் நரமாம்ச பட்சணிகளாக இருக்கவேண்டும். அதனால் தான் நமது தேக முழுவதையும் தொட்டுப்பார்த்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் உண்ணும் உணவுப்பதார்த்தங்களையும் கவனித்துப்பார்க்கையில் அவர்கள் மாம்ஸபட்சணிகள் அல்லவென்பது நன்றாகத் தெரிகிறது. ஒருக்கால் நமக்கு ஏதாவது கெடுதல் விளைவிக்கக் கருதி நமது பலத்தைச் சோதிக்க எண்ணங் கொண்டு பார்த்திருந்தாலும் இருக்கலாம். எதற்கும் போகப் போகப் பார்ப்போம்" எனத்தனக்குள்ளேயே சிந்தித்துக் கொண்டான்.

இயந்திர மயமாயிருந்த இவ்வுலகமானது கடந்த 3000 ஆண்டுகளுக்குள்ளே இயந்திரம் என்ற பேச்சேயற்றுப்போய் நல்ல திடகாத்திர சரீரிகளாய் இருந்த மக்கள் பலவீனமுற்று அறிவு ஆராய்ச்சி எல்லாம் மழுங்கிப்போய், வஞ்சனை பொய், சூது, பேடித்தனம்போன்ற குணங்களுக்கு அடிமையாய் கீழ்த்தரமான தன்மையடைந்ததின் காரணம் என்னவாக இருக்கலாம் என்பதைப்பற்றி அவ் வாலிபன் யோசித்த வண்ணமாக இருந்தான். ஆதி காலந்தொட்டு மக்கள் இயந்

நிர ஆட்சிக்கு அடிமைப்பட்டு சுகபோகங்களிலேயேலயித்து சரீர உழைப்பையும் பலத்தையும் கருதாமல் விட்டு விட்டதி லேயே இம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் தோன்றியது. முன் காலத்தில் இருந்த ஜனத் தொகைக்கும் தற்போது இருக்கும் ஜனத்தொகைக்கும்மலைக் கும் மடுவுக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டிற்று. கி. பி. 4936ம் வருஷத்துக்குள்ளேயே இம் மண்ணுலகம் அடைந்த மாறுதலானது அவ் வாலிபனது ஆச்சரியத்தை பதின் மடங்கு அதிகப்படுத்தியது. பிள்ளை பெருவதையே ஒரு சாபக்கேடாக அக் குள்ளர்கள் கருதுவதாகத்தோன்றியது. ஆங்காங்கு விருக்ஷங்கள் கொடுக்கும் கனி வர்க்கங்களையும், அதிக உழைப்பில்லாமல் இவர்கள் செய்யும் கிருஷித் தொழி லிலிருந்தும் சிறிய கைத்தொழில்களிலிருந்தும் கிடைக்கும் பலன்களை வைத்துக்கொண்டு சகல மக்களும் ஏககுடும்ப மாய் வாழ்ந்து வருவதும், சதா சர்வ காலமும் சுகபோகங் களிலேயே ஈடுபட்டிருந்ததும் அவ் வாலிபனுக்கு ஓர்விநோத சம்பவமாய் காட்சியளித்தன.

பிறகு மெதுவாக குள்ளர்களுடைய வாசஸ்தலங்களைப் பார்த்துக்கொண்டே சென்றான். ஆங்காங்கு நூற்றுக் கணக்கான குள்ளர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து சந்தோஷ மாகப்பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டு மிருந்தார்கள். மேற்படி குள்ளர்களுடைய களியாட்டங் களை சிறிது நேரம் கவனித்துக்கொண்டிருந்தான். அதற் குள் மாலை நேரம் நெருங்கியது. குள்ளர்களின் பிரிவுகளா னது ஒவ்வொன்றும் அவரவர்களுடைய இருப்பிடங்களை

அடைந்தன. எங்கும் நிசப்தம் பரவத் தொடங்கிற்று. இருட்டு முன்னரே மேற்படி குள்ளர்கள் தங்கள் தங்கள் வாசஸ்தலங்களை யடைந்ததானது மேற்படி வாலிபனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அச் சமயத்தில் குமுதா வாலிப னிடம் ஓடி வந்து அவனது கால்களைக் கட்டிக்கொண்டாள். வாலிபன் கரைகடந்த அன்போடு அவளை முதுகில் தட்டிக் கொடுத்தான். குழந்தைகள் மேல் உள்ள பாசம் அவள் மேல் அவ்வாலிபனுக்கு ஏற்பட்டது. குமுதா அவனுடைய கைகளைப்பற்றித் தன் இருப்பிடத்திற்கு வரும்படி அழைத் தாள். சிறிதுநேரங் கழித்துபோகலாம் எனவாலிபன் ஜாடை செய்தான். என்ன கூறியும் குமுதா விடவில்லை. அவள் இருட்டைக் கண்டு நடுநடுங்கினுள். உடனே புறப்பட்டு வரும்படி வற்புறுத்தி அழைக்கும் பாவனையாக ஜாடை செய்து கைகளைப் பற்றியிழுத்தாள். உடனே இருவரும் எதிர்ப்புறமிருந்த ஒரு பெரிய கட்டிடத்தின் வாயிலுக்குள் சென்று முன்புறத்தில் இருந்த ஓர் கூடத்தில் நுழைந்தார் கள். பிறகு இருவரும் சில கனிவர்க்கங்களைப் புசித்து விட்டு சயனித்துக் கொண்டார்கள். அந்தக் கூடத்தில் விளக் குகள் ஒன்றும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. ஓர் கணப் புத்தி மட்டும் எறிந்து கொண்டிருந்ததுடன் அந்தஹாலுக்கு போதுமான வெளிச்சமும் கொடுத்துக் கொண்டிருந்தது. அந்தக் கூடத்தில் (ஹாலில்) நூற்றுக் கணக்கான குள்ளர்கள் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். மேற்படி வாலிபனின் கையைத் தனக்குத் தலையணையாக வைத்துக் கொண்டு குமுதா படுத்துக்கொண்டாள். அவளுடைய உடலானது பயத்தினுல் கிடுகிடென்று நடுங்கியது. ஏன்

மேற்படி பெண்ணின் உடல் நடுங்கின தென்று வாலிபனால் நிர்ணயிக்க முடியவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் குமுதா அயர்ந்து தூங்கி விட்டாள். இரவு 8 மணிக்குமேலில்லை. வாலிபனுக்கோ தூக்கமும் வரவில்லை. அவன் மனமானது ஓர் நிலையிலில்லாமல் சஞ்சலப்பட்டுக்கொண்டேயிருந்தது. மனதிற்குள்ளேயே எதோ ஒரு வருத்தத்தை வைத்துக்கொண்டு வேதனைப் படுகிறான் என்பதை அவன் முகம் தெள்ளதில் விளக்கிக் காட்டிற்று. ஓர் நிலையிலிருக்க முடியாமல் மேற்படி கட்டிடத்திற்கு வெளியில் புறப்பட்டு அங்குமிங்குமாக உலாவிக்கொண்டே கிழேகுனிந் தவண்ணம் ஏதேதோ சிந்தனை செய்து கொண்டிருந்தான். திடீரென தலைநிமிர்ந்து எதிர்புறம் நோக்கினான். நெடுந்தூரத்தில் அக்காரிருளில் ஓர் வெண்மையுருவம் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் பாய்ந்து ஓடுவதைக் கண்டான். எதாவது ஜீவஜந்துக்கள் ஓடியிருக்குமோ என எண்ணினான். அதே சமயத்தில் மற்றோர் வெள்ளை யுருவம் பாய்ந்து செல்வதைக் கண்டான். வெகு தூரத்தில் அவைகள் இருந்தபடியால் அவைகள் என்னவிதம் இருக்கும் என்பதை எளிதில் அறிந்துகொள்ளக் கூடவில்லை.

மேலும் சிறிதுநேரம் வரை நிதானித்து நின்று அத்திக்கை ஒருமுறை உற்றுப்பார்த்தான். ஒன்றும் புலப்படவில்லை. தன்னைச்சுற்றிலும் ஓர் முறை சுற்றிப் பார்த்துக் கொண்டான். ஒன்றும் காணப்படவில்லை. எதற்கும் இதை நன்றாக ஆராய்ச்சி செய்தே தீருவதென்று தீர்மானித்தவனாய் நின்றுகொண்டிருந்தான். அதுசமயம் அக்கட்டிடத்திலிருந்து "ஆ" வென்றலறிய ஒரு பெரிய சப்தம் கேட்டது.

அது குமுதாவின் குரல் போல் அவ்வாலிபனுக்குத் தோன்றவே சரசரவென உட்புறம் சென்றான். அப்பொழுது பயங்கரமான கனவொன்றைக் கண்டு திடுக்கிட்டு எழுந்திருந்த குமுதா தன் பக்கத்தில் படுத்திருந்த வாலிபனைக்காணமல் அவனைக்கண்டு பிடிக்கும் பொருட்டு எழுந்திருந்தாள். அதற்குள் அவ்வாலிபனே தன் எதிரில் வருவதைக் கண்ட குமுதா மனமகிழ்ந்தவளாய் அவனைத்தாவி முழங்கால்களைக் கட்டிக்கொண்டாள்.

பிறகு இருவருமாக வெளியில் வந்தனர். குமுதாவிற்கு இருட்டு உள்ள பக்கம் வரவே பயமாக இருந்தது. அக்குள்ளர்கள் இருட்டைக்கண்டு பயப்படுவதின்காரணம் அறியமாட்டாமல் மேற்படி வாலிபன் திகைத்தான். அதுசமயம் மனுஷ சரீரங் கொண்ட ஓர் வெள்ளை உருவம் நமது வாலிபனுக்கு மிகச் சமீபத்தில் சென்றது. அவ்வுருவத்திற்குப் பின்னல் மற்றும் சில வெள்ளை உருவங்கள் முன்னதைத் தொடர்ந்து சென்றன. அவ்வுருவங்களைக் கண்ட குமுதா நடுநடுங்கி, தேகமுழுவதும் படபடவென்றடித்துக் கொள்ள தன்னை எடுத்துக்கொண்டு உட்புறம் செல்லும்படி வேண்டிக் கொண்டாள்.

வாலிபனுக்கு, குமுதா மேற்படி உருவங்களைக் கண்டு ஏன் அவ்வளவு நடுங்குகிறாள் என்பது மிக ஆச்சரியமாக இருந்தது. ஒருக்கால் அவைகள் பேய்களாகவாவது அல்லது பிசாசுகளாகவாவது இருக்குமா என்ற சந்தேகம் தோன்றியது. அறிவு, ஆராய்ச்சி நிறைந்துள்ள இக்காலத்தில் பேய் பிசாசங்கள் இருப்பதாக யாராவது கூறமுடியுமா


என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டான். பிறகு உன்னிப்பாக அவ்வெள்ளை உருவங்களை நோக்கியவாறு குமுதாவைத்தூக்கி தோள்மேல் சாற்றிக்கொண்டு நடக்கலானான். அவ்வெள்ளை உருவங்கள் வெளிச்சமுள்ள பக்கம் தலை நீட்டாமல் இருட்டாக உள்ள இடங்களை நோக்கியே சென்றுகொண்டிருந்தன. நேரஞ் செல்லச் செல்ல கணக்கற்ற உருவங்கள் தோன்றி ஒவ்வொரு திசையிலும் ஒவ்வொரு பிரிவாகப் பிரிந்து சென்றது. பகல் நேரங்களிலெல்லாம் அவைகள் எங்கிருந்தன, ஏன் பகல் நேரத்தில் வெளிவராமல் இரவுநேரங்களில் மட்டும் வெளி வருகின்றன என்பதைப்போன்ற பலவிஷயங்கள் அறியமுடியாத அதிசய சம்பவங்களாக இருந்தன. இவ்வுருவங்கள் வெளிப்புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் பல இடங்களிலிருந்தும் பல குள்ளர்களின் அலறல் சப்தம் எழுந்தது. அவ்வெள்ளை யுருவங்களால் ஏதோ மேற்படி குள்ளர்களுக்கு தீங்கிழைக்கப்பட்டிருக்கிறது என்பது நிச்சயமாகப் புலப்பட்டது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வெள்ளை யுருவங்கள் நாலாபுறங்களிலும் ஓடின. என்ன நேர்ந்தது என்பதையறியும் பொருட்டு அவ்வாலிபன் தன்தோளில் தூங்கிக்கொண்டிருந்த குமுதாவுடன் மேற்படி கட்டிடத்திற்குள் சென்று பார்த்தான். மேற்படி வெள்ளையுருவங்கள் உட்புகுந்து பல இடங்களிலிருந்தும் பல குள்ளர்களைக் கவர்ந்து சென்றிருக்கின்றன என்பது மேற்படி குள்ளர்களுடைய புலம்பலிலிருந்துநன்கு விளங்கிற்று." இந்த வெள்ளை யுருவங்

கள் யார்? மனிதஉடல்காணப்படுகின்றதே! மனிதனு அல்லது ஒருவகை மிருகமா? குள்ளர்களுக்கும் இவ்வுருவங்களுக்கும் பகை யேதாவது உண்டா? எக்காரணங்களுக்காக குள்ளர்கள் அவ்வுருவங்களால் கவர்ந்து செல்லப்படுகின்றனர் என்பது போன்ற பல விஷயங்கள் அவ்வாலிபனுடைய மூளையைக் குழப்பின. அது விஷயங்களைப் பற்றியெல்லாம் சிந்தனை செய்துகொண்டு அன்றைய இரவின் மிகுதி நேரத்தையும் கழித்தான்.

மறுநாள்பொழுது புலர்ந்தது. நிசப்தமாயிருந்த அக்குள்ளருலகில்மீண்டும் ஆடலும் பாடலும் ஆரம்பமாயிற்று. காலை யாகாரத்தை முடித்துக் கொண்டவுடன் வாலிபனும் குமுதாவும் பல இடங்களையும் சுற்றிப்பார்த்துக் கொண்டே சென்றார்கள். வழியெங்குமுள்ள பலவித புஷ்பச்செடிகளிலும் பூத்து மலர்ந்து நின்ற புஷ்பங்கள் நறுமணங்கமிழும் வாடையால் அவ்வழிச்செல்வோரை ஆனந்தத்தில் மூழ்கச் செய்தன. அவ்வியத்தகைக் காட்சியின்மேல் லயித்துநின்ற நம் யுவகன் தான் இதுவரை கண்டறியாத பலவித நிறமுள்ள புஷ்பங்கள் மலிந்து இருப்பதை கண்ணுற்று, ஒவ்வொரு செடியிலிருந்தும் ஒவ்வொரு மலரை பறித்து அதன் வாசனை அமைப்புபோன்ற குணுகுணங்களை ஆராய்ச்சி செய்தான். பிறகு இருவருமாக முந்திய நாளில் குமுதாவை இறக்கிவிட்ட பாழுங் கிணற்றின் சமீபம் சென்றார்கள். அக்கிணற்றைச் சமீபித்ததும் குமுதாவின் மனம் திக்கு திக்கென்று அடித்துக் கொண்டது. அவளறியாமல் அவளது கண்களில் கண்ணீர் ததும்பியது. முந்திய நாட்களின் சம்பவங்கள் எல்லாம் ஒன்றின்பின் ஒன்ருக

அவளது அகக்கண்ணின் முன் காட்சியளித்தன. சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே கிணற்றின் சமீபம் சென்று உட்பக்கம் உற்று நோக்கினள். அதே சமயத்தில் நமது வாலிபனும் கிணற்றிற்குள் உற்றுப்பார்த்தான். கிணற்றின் அடிபாகம் இருளடைந்திருந்தது.டன் கிணற்றிற்குள் இறங்கும் பொருட்டு ஏணி போன்ற மாதிரியில் ஓர் பெரிய மூங்கில் வளை வைக்கப்பட்டிருப்பதையும் கண்டான். எதற்காக அம்மாதிரி மூங்கில் வளை வைக்கப்பட்டிருக்கிறது என்ப



தை அறிந்துகொள்ள அவனல் முடியவில்லை. ஒருக்கால் குள்வர்கள் யாராவது கிணற்றிற்குள் விழுந்து விட்டால் இறங்கி, எடுக்கும்பொருட்டு இருக்குமோ என்ற சந்தேகந் தோன்றி

யது எதற்கும் அதற்குள் இறங்கித்தான் பார்ப்போமே என்ற எண்ணம் தோன்றியது. உடனே குமுதாவிடம் ஜாடையாகத்தான் அக்கிணற்றிற்குள் இறங்கிப்பார்த்து விட்டு வருவதாகத் தெரிவித்து அதன் சமீபம் சென்றான். முத லில் அவனுடைய ஜாடைகளை அறிந்துகொள்ள முடியாமற் போனபோதிலும் அவ்வாலிபன் கிணற்றின் சமீபம் சென்று அதற்குள் இறங்கியதைக் காணவே, அப்பெண்மணி மிக்க பயமடைந்தவளாய் அதற்குள் இறங்கவேண்டாமென கண்க ளில் நீர் ததும்ப இறைஞ்சி வேண்டிக்கொண்டாள்.

மேற்படி பெண்மயிலின் வார்த்தைகளைச் சிறிதும்கவ னியாதவனாய் மேலும் மேலும் கிணற்றிற்குள் இறங்கிக் கொண்டேயிருந்தான். தன் வார்த்தைகளைச் சிறிதும் கவ னியாமல் இறங்கிச் செல்வதைக்கண்ட குமுதா பதறியழுத வண்ணம் பாய்ந்து சென்று கிணற்றிற்குள் குனிந்து அவனு டைய கரங்களைப்பற்றி இழுத்தாள். அவள் கண்களிலி ருந்து தாரை தாரையாக கண்ணீர் வடிந்தது. அவளுடைய பரிதாபத்தைக் காணச்சகியாமல் அவ் வாலிபன் மறுபடியும் கிணற்றிலிருந்து மேலேறி வெளியில் வந்தான். "ஏன் அதற் குள் இறங்கக்கூடாது. எதற்காக குமுதா இவ்வளவு தூரம் தடை செய்ய வேண்டும். அக்கிணற்றிற்குள் என்ன ஆச்சரி யசம்பவம் புதைந்து இருக்கிறது" என்பது போன்ற எண் ணங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் எழுந்தன. அதுவிஷயம் பற்றி குமுதாவை பலகேள்விகள் கேட்டான். குமுதா அக் கேள்விகளை அறிந்து கொண்டாளோ என்னவோ தெரிய வில்லை. ஆனால் அவள் அக்கிணற்றைச் சுட்டிக்காட்டி

அளித்த பதில்கள் ஒன்றும் நூம் வாலிபனுக்குப் புரியவில்லை. சாவகாசமாக மேற்படி விஷயத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தவனாய் அவளை அழைத்துக் கொண்டு அவளது இல்லம் அடைந்தான். அன்றையதினம் அமாவாசை. மாலை நேரம் நெருங்க நெருங்க குள்ளர்களுடைய மனமானது படபடவென்றடித்துக் கொண்டது. முகமானது பொலிவற்றிருந்தது. ஆட்டமும் பாட்டமும் இருந்த இடந் தெரியாமல் மறைந்தது. மாலை 6 மணிக்கெல்லாம் தங்களது போஜனத்தை முடித்துக் கொண்டவர்களாய் தங்கள் இருப்பிடத்தில் கணப்புத்தியை மூட்டிவிட்டு எல்லோரும் படுத்துக்கொண்டார்கள். குள்ளர்களின் செய்கைகளைக் கவனித்த வாலிபன், அன்றையதினம் ஏதோ ஒரு விசேஷம் நடக்கப் போகிறது என்பதை உணர்ந்து கொண்டவனாய் அதை கவனிக்கும் பொருட்டு குமுதாவைக் கூட்டிக்கொண்டு சிறிது தூரத்திலுள்ள ஓர் கல் மண்டபத்திற்குச் சென்றான். அவ்விடத்தை யடைந்ததும் குமுதாவைத் தன் கால்களின் மேல் படுக்கவைத்துகொண்டு அவளை நிர்ப்பயமாய் தூங்கும்படி ஜாடை செய்தான். அதை அறிந்து கொண்ட குமுதா சந்துஷ்டியும் சந்தோஷமும் அடைந்தவளாய் நிர்விசாரமாய்த் தூங்கினாள். வாலிபன் என்ன விசேஷம் நடக்கப்போகிறதென்பதை அறிய நாற்திசைகளிலும் தன் பார்வையைச் செலுத்திய வண்ணமிருந்தான்.

இரவு மணி 10 ஆயிற்று. எங்கும் காரிருள் பரவி ஒரே இருட்டாக இருந்தது. காற்றினால் சலசலவென்றாடிக் கொண்டிருந்த மரக்கிளைகளின் சப்தத்தைத் தவிர எங்கும்

ஒரே நிசப்தமாக இருந்தது. அதுசமயம் 3 அடி உயர முள்ள வெண்மை நிறங் கொண்ட பல மனித உருவங்கள் பல இடங்களுக்கும் பாய்ந்து சென்ற வண்ணமிருந்தன. அவைகள் எங்கிருந்து வந்து என்ன செய்யப்போகின்றன. வென்பதை அறிய ஆவல் கொண்ட வாலிபன் குமுதாவை உற்று நோக்கினன். அவள் அயர்ந்து நித்திரை செய்வதைக் கண்டு மெதுவாக அவளைத் தூக்கி கீழே கிடத்திவிட்டு, அவள் சமீபத்திலிருந்துகொண்டே அவ்வுருவங்களை கவனிக்கத் தீர்மானித்தவனாய் சிறிதும் சப்தம் செய்யாமல் அவைகளை நோக்கிச் சென்றான். அன்று தான் இறங்கத் தீர்மானித்த கிணற்றின் சமீபம் நெருங்கினன். அதற்குள்ளிருந்து பல உருவங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. "ஓஹோ! இவ்வெள்ளை யுருவங்கள் இக்கிணற்றிற்குள் வசிக்கின்றார்ப் போல் இருக்கின்றது. அதனால்தான் நான் இறங்குவதைத் தடை செய்திருக்கிறாள்." என அறிந்து கொண்டவனாய் அங்கேயே நின்றான்.

கிணற்றிற்குள் இருந்து வெளிப்புறப்பட்ட வெள்ளையுருவங்கள் ஓர் வாலிபன் தன் சமீபம் நிற்பதை அறிந்து அவன் சமீபம் நெருங்கின. தூய்மையான வெண்மை நிறமுடைய மனிதர்களாக அவ்வுருவங்கள் காணப்படவே, வாலிபன் மீண்டும் அவைகள் அருகில் நெருங்கிச் சென்றான். அவ்வுருவங்கள் நல்ல கட்டு மஸ்தான தேகமுடையனவாக இருந்தன. தங்கள் சமீபத்தில் வேற்றாள் நிற்பதைக் கண்டதும் அவைகள் பாய்ந்து அவனை அடிக்கவும், பற்களால் கடிக்கவும் தொடங்கின. வாலிபன் மிக்க கோபமடைந்த

வனாய் ஒரே அடியில் நாலு உருவங்களைக் கீழே வீழ்த்தினான். அதே சமயத்தில் குமுதாவின் வீறிட்டலறும் ஓசை அவனது செவிகளில் விழுந்தது. தனது தப்பிதத்தை யுணர்ந்து கொண்டவனாய் கல் மண்டபத்தை நோக்கி ஓடினான்.

• அவ்விடத்தில் நான்கு வெள்ளை யுருவங்கள் குமுதாவைக் கீழே தள்ளி அவளது நெஞ்சைப் பிடித்து அமுக்கிக் கொண்டிருந்தன. சகிக்க இயலா கோபத்தோடு ஓடிய வாலிபன் அவ்வுருவங்களைப் பிடித்து பந்தை வீசி எறிவதைப் போல வீசி எறிந்து அவர்கள் வசமிருந்து குமுதாவைக் காப்பாற்றினான். தூக்கி எறியப்பட்ட அவ்வெள்ளை மனிதர்கள் மீண்டும் வாலிபனை நெருங்கிச் சூழ்ந்து கொண்டார்கள். குமுதா மிக்க பயமடைந்து வாலிபனின் கால்களைக் கெட்டியாகப்பற்றிக் கொண்டாள். வீராவேசங் கொண்ட யுவான் ஒரு வெள்ளை மனிதனின் கால்களைப்பற்றித் தூக்கி மற்ற மனிதர்களின் மேல் மோதியடித்தான். அவ்வடி பட்டதுதான் தாமதம் அவ்வெள்ளைக் குள்ளர்கள் எல்லோரும் பெருத்த குரலில் ஓலமிட்டார்கள். அவ்வொலி கேட்டதும் கணக்கற்ற குள்ளர்கள் அவ்வாலிபனை நெருங்கினார்கள். தன்னை நோக்கி வந்த குள்ளர்களை வாலிபன் தனது கைகளால் தூக்கித் தூக்கி எறிந்த வண்ணமிருந்தான். தனது கைகளால் அவர்களைச்சமாளிக்க முடியாமற்போகவே, சரேலென குமுதாவைத்தூக்கிச் சென்று கல்மண்டபத்தின் ஒரு பக்கத்தில் உட்கார வைத்துவிட்டு, அவளை நெருங்கா வண்ணம் அக்குள்ளர்களைத் தன்கைகால்களைக் கொண்டு தடை செய்து வந்தான்

சிறிது நேரத்திற்கெல்லாம் குள்ளர்களின் கூட்டம் நூற்றுக்கணக்காகப் பெருகிவிடவே, அவர்களைச் சமாளிக்க வழி தோன்ருமல் அவர்களை ஒரே தாண்டாகத் தாண்டிச் சென்று ஒரு பெரிய கழியை எடுத்து வந்தான். அத்தடியை இடசாரி வலசாரியாகச் சுற்றி அவர்களை விரட்டியடிக்க சுமார் ¼ மணி நேரத்திற்கதிகமாயிற்று அவர்களை விரட்டியோட்டியதும் குமுதாவின் சமீபம் நெருங்கினுன். அவளைக் காணவில்லை. கல்மண்டபம் முழுவதும் சுற்றிச் சுற்றி யலைந்தான். எங்கும் காணப்படவில்லை. தான் சண்டை பிடித்துக் கொண்டிருக்கையில் தந்திரமாக மேற்படி குள்ளர்கள் அவளை எடுத்துச் சென்றது அவனது மனதை ஒரு நிமிஷம் ஸ்தம்பிக்கச் செய்தது. அவளது கதி என்னவாகுமோ என மனங்கலங்கினுன். அவளைத் தனியே விட்டுச் சென்ற தன் மதியீனத்தை நொந்து கொண்டான்.

ஐந்தாம் அத்தியாயம்.

வீரப்பெண்மணியின் தீரச் செய்கை.

தாராபாயின் முதுகின்மேலிருந்து கீழே குதித்த தவமணி மிக்க பதைப்புடன் தங்களை நோக்கி வரும் மனிதர் யாரென்பதைக் கவனித்தாள். அன்னியர் வேறு

யாருமில்லாமல் தன்னுடைய சொந்த சகோதரனான ஞான சிகாமணியே அவ்விடம் வருவதை யறிந்த தவமணியின் மனம் நிம்மதி யடைந்தது. புன் சிறிப்புடன் தன் சகோத ரனை எதிர் நோக்கிச்சென்றாள். தவமணியைக்கண்ட ஞான சிகாமணி "தவம்! நீயா இங்கு இருக்கின்றாய் வேறு யாரோ என்றல்லவோ நினைத்தேன். நானும் ரொம்ப நேரமாக கோட்டா அவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறேன். அவர் எங்கே யிருக்கிறாரோ தெரியவில்லை. நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்றான்.

தவமணி:— "அண்ணா! நாங்கள் இப்படியே பேசிக் கொண்டு வந்தோம் பேச்சு சுவாரஸ்யத்தில் எவ்வழிப் போகி றோமென்பதைக் கூட நினைக்காமல் இங்கு வந்துவிட்டோம். நான் என்னுடைய அவசர புத்தியால் கோட்டா அவர்களைத் தூஷித்தேன். நான் செய்தது தவறு என்பது நன்றாகத் தெரிகிறது. அவர் மனந்தான் வீணாக வருந்துவானேன்! அவர் எனக்குக் கொடுப்பதாகக் கூறிய சங்கீதம்பயிர்ப்பிக் கும் வேலையை ஏற்றுக் கொள்ளத்தான் போகிறேன். உன் இஷ்டம் எப்படி?

ஞானசிகாமணி:— "தவம்! என்னிஷ்டத்தை நீ கேட்க வும் வேண்டுமா? இச்சமாசாரத்தைக் கூறினல் அவர் மிக சந்தோஷமடைவார். அவரை, சுற்றியலைந்து கண்டுபிடித்து மேற்படி சமாசாரத்தைக் கூறிய பிறகு தான வேறு வேலை செய்யப்போகிறேன்.

உடனே ஞான சிகாமணி தன் தங்கையிடம் விடை பெற்றுக்கொண்டு வந்த வழியே திரும்பிச் சென்றான்.

தாராபாய் தவமணியிடம் மெதுவாக தாங்கள் தங்கள் சகோதரிடம் கூறியபடி சங்கித உபாத்திமைத் தொழிலை ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா என்று கேட்டாள். அதற்கு உத்திரமாக தவமணி தாராபாயின் காதில் சில வார்த்தைகளை மிக ரகஸியமாக உரைத்தாள். அதைக் கேட்டதும் தாராபாயின் முகத்தில் ஒருவித திருப்தியும் பயமும் உண்டாயிற்று.

தான் சற்றும் எதிர்பாராதவாறு, தவமணி தன்னுடைய கோரிக்கைக்கு இணங்கி வருவதைக் கேட்ட கோட்டா மிகச் சந்தோஷ மடைந்தான். அவளுடைய அழகிய உருவம் அவனுடைய அகக்கண்முன் தோன்றியது. கிடைத்தற்கறிய சாயுஜ்ய பதவியை அடைந்து விட்டவன் போல் மிகக் குதூகலப் பட்டான். அவளை உடனே போய்க் கண்டு அவளது வாயின் மூலமாகவே அவளது இஷ்டத்தைத் அறிந்துகொள்ள வேண்டுமென துடிதுடித்தான். தன்னுடைய காரைக் கொண்டுவரும்படி தனது சிப்பந்தியை ஏவினான். கார் வந்த உடனே அதில் ஏறிக்கொண்டு தவமணியின் வீட்டை யடைந்தான். கோட்டாவைக் கண்ட தவமணி புன்னகை தவிழும் முகத்துடன் அவனைவரவேற்று உபசரித்து தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள். அவள் வீட்டின் நடுக்கூடத்தில் போடப் பட்டிருந்த நாற்காலிகளில் ஒன்றில் அவரை அமரும்படி கூறி தானும் சற்று ஒதுக்குப்புறமாக ஓர் நாற்காலியில் அமர்ந்தாள், சிறிது நேரம் வரை இருவரும் வாய் திறவாமல் மௌனிகளாய் இருந்தனர். கடைசியாக கோட்டா மேலும் பேசாமல் இருக்கக் கூடாதவனாய்ப்

தவமணியைப் பார்த்து "அம்மணி! தங்கள் சகோதரர் இன்றுஎனக்கு ஓர் நற்செய்தியைக் கூறினர். அது வாஸ்தவம்தானு? அதுவிஷயத்தை அறிந்து கொண்டு போகலாம்எனத் தங்களிடம் வந்தேன்."

தவமணி:—" தாங்கள் கூறுவது ஒன்றும்புலப்படவில்லையே என் அண்ணன் தங்களிடம் என்ன கூறினர்.?"

கோட்டா:— "தாங்கள் சங்கீத உபாத்தினியாக இருக்கச் சம்மதித்திருப்பதாகக் கூறினர். தங்களுக்கு விருப்பமுண்டானல் என்று முதல் சேர்ந்து கொள்ள சம்மதிக்கிறீர்கள்.?"

தவமணி:—" "எனக்கு என்னமோ அப்பெண்மணிகளுக்குசங்கீதம் கற்றுக்கொடுக்க மிகஆவலாகத்தான் இருக்கிறது. அதனல்தான் என் சகோதரரிடம் அதுவிஷயம் பற்றி என் அபிப்பிராயத்தைக் கூறினேன். தங்களுக்கு ஆட்சேபனை யில்லையெனில் இன்று முதலிலிருந்து அவ்வேலையை ஏற்றுக்கொள்ளத் தயார். தாங்கள் எப்படிக் கூறினலும் அதன்படி நடந்துகொள்வதில் தடையில்லை."

மேற்படி வார்த்தைகளைக் கேட்ட கோட்டா தான் கடைசியில் அடைந்த வெற்றியைக் குறித்து மிகக்குதூகலமடைந்தவனய் அப்பெண்மணியை அன்று முதல் வேலையை ஏற்றுக்கொள்ளும்படியும், மாதம் 500 ரூபாய் சம்பளம் ஏற்படுத்தியிருப்பதாகவும், கூறி விடைபெற்றுச் சென்றன். தவமணியும் அவ்வேலையை ஏற்றுக்கொண்டு அன்று முதல் அக்கன்காட்சி சாலையிலுள்ள வாலிபப் பெண்கள் சிறுவர்

சிறுமிகளுக்கு தென்னிந்திய சங்கீதம் கற்றுக்கொடுத்து வந்தாள். தவமணியின் அபார சங்கீதத் திறமையையும் அவள் கற்பிக்கும் சாமர்த்தியத்தையும் கண்ட கோட்டா சதா சர்வ காலமும் அவள் அருகிலேயே இருந்து அவளது ரூபலாவண்யத்தைக் கண்டு களித்த வண்ணமாகவே யிருந்தான்.

நான்கு நாட்கள் வரை இயாதொரு விசேஷ சம்பவமும் நடைபெறவில்லை. பிரதி தினமும் காலையில் கோட்டா தானே தவமணியின் வீட்டுக்குக் காரில் சென்று அவளை அழைத்து வந்து பகல் 10 மணிக்கு கொண்டு போய் விட்டு விடுவான். அதுபோலவே மாலையில் 5 மணிக்கு அழைத்து வந்து இரவு 7 மணிக்கு சங்கீதப் பயிற்சி முடிந்ததும் காரில் அவளது வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு வருவதுமாக இருந்தான். கோட்டா, தன்னுடன் அடிக்கடி காரில் வருவது அவளுக்கு திருப்தியை யளித்தது என்பது அவள் முகக்குறியிலிருந்து விளங்கியது. ஐந்தாம் நாள் மாலை வழக்கம்போல் கோட்டா தவமணியைத் தன் காரில் ஏற்றிக் கொண்டு அவளது வீட்டிற்குப்போய்ச் சேர்ந்தார். இரவு மணி $7\frac{1}{2}$ க்கு மேல் ஆயிருந்தபடியால் இராப்போஜனத்தை தன் வீட்டிலேயே முடித்துக்கொண்டு போகலாம் எனத் தவமணி கோட்டாவைக் கேட்டுக்கொண்டாள். எப்போது அம்மாதிரி சந்தர்ப்பம் கிடைக்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த கோட்டா சரியென சம்மதித்தார். உடனே தவமணி காரை இரவு 9 மணிசமயத்திற்குக் கொண்டுவரும்படி கூறி அனுப்பினாள். அதற்குள் ஞான சௌமணியும் அவ்

விடம் வந்து சேர்ந்தான். சிறிது நேரஞ் சென்றது. கோட்டாவும் ஞான சிகாமணியும் சாப்பிட அமர்ந்தனர். சமையல்காரன் பலவித அறுசுவை உணவுப் பதார்த்தங்களைக், கொண்டுவந்து பரிமாறினன். இருவரும் பற்பல விஷயங்களைக் குறித்து சம்பாஷணை செய்து கொண்டே புசித்தார்கள். தவமணியும் தன இன்னிசைக் குரலெடுத்து இனிமையாகப்பாடி எல்லோரையும் சந்தோஷ சாகரத்தில் மூழ்குவித்தாள்.

அதுசமயம் வாசற் கதவை ஒருவர் மெதுவாகத் தட்டிய சப்தம் கேட்டது. அச்சப்தத்தைக் கவனியாதவளாய் இருந்தாள் தவமணி. தட்டப்படும் சப்தம் அதிகப்படவே கோட்டா தவமணியைப் பார்த்து "யாரோ கதவைத்தட்டுகிறுப் போலிருக்கிறது. போய்ப் பாருங்கள்" என்றுன். உடனே தவமணிசென்று கதவைத் திறந்தாள். தகுந்த உயரமும் அதற்கேற்ற கட்டு மஸ்தான தேகமுடைய ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர், போலீஸ் கான்ஸ்டேபிள்கள் எட்டுப் பேருடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு சிறிது அச்சங்கொண்டவளாய் "ஐயா! தாங்கள் யார்? எதற்காகத் தாங்கள் கதவைத் தட்டினீர்கள்" என்று மிகப்பணிவான குரலில் கேட்டாள்.

போலீஸ் உத்தியோகஸ்தர்:— "அம்மணி! தற்போது நம் நகரில் வந்திறங்கியிருக்கும் கண்காட்சி சாலை சொந்தக்காரரான கோட்டா என்பவர் இங்கிருப்பதாகக் கேள்விப்பட்டு வந்தேன். அவருடன் இரண்டொரு வார்த்தைகள் பேசவேண்டும். அவர் இங்கே யிருக்கிறுரா?"

தவமணி போலீஸ் உத்தியோகஸ்தரைப் பார்த்து கோட்டா என்பவர் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருப்ப தாகக் கூறி, உள்ளே வந்து உட்காரும்படி கூறினாள். உடனே போலீஸ் உத்தியோகஸ்தர் உள்ளே சென்று ஓர் நாற்காலி யில் அமர்ந்தார். அவரைச் சுற்றி ஆயுதந் தரித்த போலீஸ் வீரர்கள் நின்று கொண்டிருந்தனர்.

தன்னைத் தேடி ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர் வந்தி ருக்கிறார் என்பதைக் கேட்டவுடனேயே கோட்டா பரபர வென சாப்பிட்டுவிட்டு அவரிடம் வந்து "என்ன சமாசாரம்" என்று கேட்டான். போலீஸ் உத்தியோகஸ்தர் மரியாதை யாக எழுந்து "ஐயா! தங்கள் பேருக்கு ஓர் சர்க்கார் உத்திரவு வந்திருக்கிறது. வாசித்துப் பாருங்கள்" என்று ஓர் கடிதத் தைக் கொடுத்தான்.

கோட்டா:— "எனக்கா! சர்க்கார் உத்திரவா!! எந்த சர்க்கார்? எதற்காக?" என்று கூறிக்கொண்டே கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதைப் படித்து முடிந்ததும் கோட் டாவின் முகம் கோவைப்பழம் போல் சிவந்து கண்களில் கோபத்தணல் வீச அக்கடிதத்தைக் கசக்கி அப்போலீஸ் உத்தியோகஸ்தர் மேல் வீசி எறிந்தான். "போமையா! போம்!! உம்ம சர்க்காரு மாச்சு! நீங்களுமாச்சு!! நீங்கள் என்னை என்ன அறியாப்பிள்ளை என்றுநினைத்துஎய்ப்பதுபோ லல்லவாயிருக்கிறது" எனப் படபட வென்று மொழிந்து கொண்டே போலீஸ் இன்ஸ்பெக்டரை ஒரு புறத்தில் தள்ளி விட்டு வெளியே புறப்பட்டான்.

சற்றும் அச்சமென்பதே யில்லாமல் தன்னைப்பிடித்துத் தூரத்தள்ளியது மல்லாமல் தன்னையும் தன் சர்க்காரையும் கேவலமாகப் பேசிய வண்ணம் செல்லும் அந்தஜப்பானியன் மேல் அப்போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு சொல்லொணு கோபம் பொங்கி எழுந்தது. சரேலெனப் பாய்ந்து கோட்டாவின் வலக்கரத்தைத் தன் வலக்கரத்தால் பற்றி விசையாக இழுத்து உட்பக்கத்தில் தள்ளினுன். "என்னஐயா! நீங்கள் இருப்பது எந்தவிடம் என்பதே நினைப்பில்லாதவரைப் போலல்லவா பேசுகிறீர்! தாங்கள் தற்போது தங்கள் தேசமாகிய ஜப்பானிலில்லை. எங்கள் இந்திய நாட்டில் இருக்கிறீர். எங்கள் நாட்டிலிருந்து கொண்டு எங்களைக் கேவலமாக பேசுவதோடல்லாமல் எங்கள் சர்க்காரைத் தூஷிக்கும் குற்றத்தையும் செய்தவராகின்றீர். உம்முடைய சாமர்த்திய மெல்லாம் நாங்கள் அறியாததல்ல. அதெல்லாம் ஒன்றும் பலிக்காது. இந்நாட்டிலுள்ளவரை எங்கள் அதிகாரத்துக் குட்பட்டுத்தான நடக்க வேண்டும். இப்போது என்ன சொல்கிறீர்? உத்திரவுப்படி நடந்துகொள்கிறீரா அல்லது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வதா? வெளியாருக்குத் தெரியாமல் ரகஸியமாக நடக்கப் போகும் காரியத்தை நீங்கள் பகிரங்கப்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்கள் போலிருக்கிறது" என்முன்.

அதற்குள் தவமணியும் ஞானசிகாமணியும் போலீஸ் உத்தியோகஸ்தரிடம் நயமாக "ஐயா! தாங்கள் கொண்டு வந்த உத்திரவின் விபரம் ஒன்றுமே தெரியவில்லை. எதற்காக கோட்டா அவர்களுக்கு நம் சர்க்கார் உத்திரவு அனுப்பியுள்ளார்கள். அவரை என்ன செய்யச் சொல்கிறீர்கள்.

அவர் தகுந்த மதிப்புவாய்ந்த மனிதர் என்பது உங்கள் ஞாபகத்தில் இருக்கட்டும்" என்று கூறினர்கள். "இக்கோட்டா என்பவர் ராஜாங்க வேவுகாரர் என்பதாகவும், நமது நாட்டின் சகல விஷயங்களையும் உளவறிந்து அன்னிய நாட்டிற்கு அறிவித்து அதன்மூலம் ராஜாங்கங்களுக்குள் சச்சரவை விளைவிக்க வந்த வேவுகாரர் என்று இவர் மேல் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அதற்கு ஆதரவாக ஏதாவது கடிதங்கள் இவரது பங்களாவில் இருக்கின்றனவா என்பதை அறிந்து வரும்பொருட்டு என்னை நம்மிந்திய சர்க்கார் அனுப்பியுள்ளார்கள். இவர் மேல் குற்றம் ஸ்தாபிக்கக் கூடிய எந்த கடிதமும் இல்லாவிட்டால் இவருக்கு யாதொரு கெடுதலுமில்லை. இவரை விட்டுவிடுவார்கள். ஏதாவது அகப்பட்டால் இவர் விசாரணைக்கு வந்து நிற்க நேரிடும். ரகசியமாக நாங்கள் சோதனை செய்து விட்டுப்போய் விடுவோம். இவர் அதை விரும்பவில்லை போலிருக்கிறது." என்றார்.

அதன் மேல் தவமணியும் ஞானசிகாமணியும் கோட்டாவைத் தனியாக அழைத்துச்சென்று "மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயப்பட வேண்டும். என்ன வேண்டுமானாலும் சோதனை போட்டுக் கொள்ளட்டும். அவர்களுக்கு என்ன தடயம் கிடைக்கப்போகிறது. வீணில் நாம் ரகளை செய்வதால் பொது மக்களுக்கு இவ்விஷயத்தைப் பகிரங்கப்படுத்தியது போலாகும். இவர்கள் சோதனையில் ஒன்றும் கிடைக்காமல் இருக்கட்டும்! நாம் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்" என்று கூறினர்கள்.

மேற்படியார்களின் வார்த்தைகளுக்கிணக்கிய கோட்டா, தானே சகல இடங்களையும் காட்டுவதாகப் புறப்பட்டான். கோட்டா, வருவதால் விஷயம் குழப்பத்தில் முடியும், என்று அவ்வுத்தியோகஸ்தன் கூறி வேறு யாரையாவது அவருக்குப் பதிலாக அனுப்புவதானல் தனக்கு தடையில்லை" எனக் கூறினன். அதன் மேல் தவமணி தான் சென்று சகல இடங்களையும் காட்டிவிட்டு வருவதாகக் கூறி கோட்டாவிடமிருந்து சாவிகளைப்பெற்றுக் கொண்டு புறப்பட்டாள். தன்னுடன் புறப்பட்ட, தன் சகோதரனை கோட்டாவுக்குத் துணையாய் இருக்கும்படி கூறி நிறுத்தினள்." "தவமணியும் அவளுடன் வரும் நண்பரும், ஒரு காரியார்த்தமாக அவ்விடம் வருவதால், அவர்களின் இஷ்டப்படி நடந்து கொள்ளவும்!-கோட்டா" என்று ஒரு கடிதம் எழுதி தவமணியிடம் கோட்டா கொடுத்தான்.

வாசலில் தயாராக நின்றுகொண்டிருந்த காரில் தவமணியும் போலீஸ் உத்தியோகஸ்தரும் புறப்பட்டார்கள். ஜவான்கள் எண்மரும் கோட்டாவுக்குக் காவலாக நின்றுகொண்டிருந்தனர். கோட்டாவின் பங்களாவை அடைந்தும் காரை வெளியே நிறுத்திவிட்டு இருவரும் உள்ளே சென்றனர். தவமணியைக் கண்ட காவலிலிருந்த ஜப்பானிய சிப்பாய் மரியாதையாக ஒருபுறம் ஒதுங்கி வழிவிட்டான். இவர்கள் இருவரையுங் கண்ட காரியஸ்தன் ஓடிவந்து, தவமணி கொடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்தான். அவர்களுக்கு தான் யாது செய்யவேண்டுமெனக் கேட்டான்.

தவமணி:— "நமது எஜமான் அவர்கள் தமது பிழ புறத்து ரகஸிய அறையில் காவலில் வைத்திருக்கும் வாலி பனையும், தாராபாய் என்னும் பெண்மணியையும் உடனே அழைத்து வரும்படி அனுப்பினர். எனக்குத் துணையாக இக்காவலாளேயும் அனுப்பியுள்ளார். அவர் தமது அறை யின் சாவிக் கொத்தை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள்" என்று கூறிக்கொண்டே, அவ்வறைக் கதவைத் திறந்தாள்.

காரியந்தன், தவமணி, போலீஸ் உத்தியோகஸ்தன், ஆக மூவரும் உள்ளே நுழைந்தனர். அவ்வறையில் முன் னத்தியாயத்தில் விவரித்தபடி வாலிபன் ஒருவன் தன் கை கால் வெள்ளிச் சங்கலிகளால் பிணைப்புண்டு படுத்திருந்தான். அவ்வாலிபனுக்குப் பின்புறம் ஓர் கரிய உருவம் தன் கண்க ளால் அவ்வாலிபனை உற்று நோக்கியபடி தன் கையில் கைத் துப்பாக்கியைப் பிடித்த வண்ணம் நின்றுகொண்டிருந்தது. இவர்களைக் கண்ட வாலிபன் மெதுவாக எழுந்திருந்தான். தவமணியைக் கண்டதும் முகத்தில் புன்சிறிப்பு தவிழ உட்கார்ந்து கொண்டான். ஆனால் தவமணி அப்புன்சிறிப் பைக் கண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை. வாலிபன் எழுந்துட்கார்ந்ததும் அவனுக்குப் பின்புறத்திலிருந்த அக் கரிய உருவத்தின் கைகள் மேலே கிளம்பி துப்பாக்கியை வாலிபனுக்கு நேரே குறிபார்த்தது. அதனுடைய ஒருவிரல் துப்பாக்கிக்குதிரையின் மேல்பட்டுக்கொண்டிருந்தது. அவ்வு ருவத்தினுடைய பார்வையானது நேரே அவ்வாலிபன் மேல் பதிந்திருந்ததேயன்றி அவ்வறைக்குள் நுழைந்த யாரையும் கவனித்ததாகத் தோன்றவில்லை.

வாலிபன் மெள்ள எழுந்திருக்க முயற்சிப்பதைக் கண்ட காரியஸ்தன் படபடப்பான குரலில் "சிறிது நேரம் பேசாமலிரு ஐயா! இல்லாவிடில் உம்முயிரை இழப்பீர்" என்று கூறி அக்கரிய உருவத்தின் சமீபம் சென்று ஒரு பொத்தானை அமுக்கினான். அமுக்கியதுதான் தாமதம், அவ்வுருவத்தின் கைகள் கீழே தாழ்ந்து போய் துப்பாக்கி கீழே விழுந்து விட்டது. அதனுடைய கொடிய இருகண்களும் மறைந்து போய், உயிரற்ற ஒரு உடல் போல் அவ்வுருவம் தென்பட்டது. அவ்வதிசய சம்பவத்தைக் கவனித்த தவமணி அதன் அருகில் சென்று காரியஸ்தன் அறியாவண்ணம் மெதுவாகத் தொட்டு ஆராய்ச்சி செய்துபார்த்தான். காரியஸ்தன் மேற்படி வாலிபனுடைய விலங்குகளை எடுத்துவிட்டு அவனை விடுவித்தான். அதற்குள் தாராபாயும் அழைத்து வரப்பட்டாள்.

தவமணி காரியஸ்தனிடம் விடைபெற்றுக் கொண்டு வாலிபன், தாராபாய், போலீஸ் உத்தியோகஸ்தர் முதலியோருடன் காரில் ஏறிக் கொண்டான். கார் முதலில் மெதுவாகப் புறப்பட்டு, பின்னர் அதிவேகமாக சுமார் ½ மணி நேரம் வரை ஓடிக்கொண்டிருந்தது. காருக்குள் தவமணியும் வாலிபனும் பல விஷயங்களைக் குறித்து மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். காரை ஓட்டிக்கொண்டிருந்த போலீஸ் உத்தியோகஸ்தரிடம் தவமணி சில வார்த்தைகளைக் கூறவே, அவர் காரைத் திருப்பி வேறு பக்கமாக விட்டுக்கொண்டு சென்றார். தான் அன்று சுடுமணலில் அவஸ்தைப்பட்ட இடத்தின் வழியாகக் கார் செல்வதை

வாலிபன் அறிந்து கொண்டான். வாலிபன் கூறிய அடையாளப்படி காரை அன்று அவ்வாலிபன் வீழ்ந்த இடத்தருகில் நிறுத்தினான். உடனே வாலிபனும் தவமணியும் காரிலிருந்து கீழிறங்கினார்கள். தவமணி அவ்வுத்தியோகஸ்தனிடம் இரண்டு கத்தை நோட்டுகளைக் கொடுத்து, தாராபாயை அதிஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படி கூறினாள். உடனே உத்தியோகஸ்தர் அவ்வாலிபனிடம் ஒரு பாட்டரி விளக்கை வெளிச்சத்திற்காகக் கொடுத்து விட்டு காரிலேறிக் கொண்டு சென்றார்.

வாலிபன் தவமணியை கூட்டிக்கொண்டு பாட்ரி விளக்கின் மூலமாக அன்றையதினம் தான் ஒரு சிறு குகை போன்ற அறையில் புதைத்து வைத்த இயந்திரம் இருக்கும் அறைக்குள், நுழைந்தான். தான் வைத்தது வைத்தபடியே அவ்வியந்திரம் இருக்கக் கண்டு சந்தோஷித்தவனாய் அதை வெளியில் எடுத்தான். ஆனால் அதே சமயம் சிறிது தூரத்தில் ஒரு கார் அதிவேகமாக தங்களை நோக்கி வருவதைக் கண்டு வாலிபன் நடுநடுங்கியவனாய் சரசரவென மற்றோர் இடத்தில் புதைத்து வைத்திருந்த மறையாணியை அவ்வியந்திரத்தில் முடுக்கினான். அதற்குள் கார் வெகு சமீபம் வந்து விட்டது. வண்டியிலிருந்து கோட்டாவும், காரியஸ்தனும் இரு ஜப்பானிய வீரர்களும் இறங்கி வாலிபனை நோக்கிப் பாய்ந்து ஓடி வந்தார்கள். தவமணி தம்முடைய இறுதிகாலம் சமீபித்துவிட்டது என நடுநடுங்கினாள். ஜப்பானிய வீரர் இருவரும் குகை அறைக்குள் பாய்ந்து வந்தனர். ஆனால் அதே சமயத்தில் இஸ்-ஸ்-ஸ் என்றதொரு சப்தம்

ஏற்பட்டது. நம் வாலிபன் தன் பாட்டரி விளக்கை பொருத்தாதபடியால் எங்கிருந்து என்ன சப்தம் வருகிறது என்பது ஐப்பாலியர்க்கு விளங்கவில்லை. வெளிச்சம் இல்லாமல் குகைக்குள் புகவும் முடியவில்லை. காரின் விளக்கு வெளிச்சத்தை குகைக்குள் திருப்பினார்கள். "ஆ! என்ன ஆச்சரியம். சவமணியும் வாலிபனும் மாயமாய் மறைந்து போனதைக்கண்ட கோட்டா முதலியோர் பேராச்சரிய முற்றனர். ஆனல் இஸ் என்ற சப்தம் மட்டும் ஓயாமல் கேட்டுக்கொண்டேயிருந்து கிறிது நேரத்தில் அதுவும் கேட்கவில்லை. அம் மலையைச் சுற்றிச் சுற்றி மூலை முடுக்கெல்லாம் தேடியும் அவர்கள் தென்படவேயில்லை.

ஆறும் அத்தியாயம்.

ஆராய்ச்சியில் விளைந்த அற்புதம்.

"அன்றைபுதினம் நான் அறிவித்தபடி இன்று உங்களுக்கு எனது இடையுறு ஆராய்ச்சியால் விளைந்த அற்புதத்தைப் பற்றிக் கூறப் போகிறேன்" என்று நல்ல தேகக் கட்டமைந்த 30 வயது மதிக்கத்தக்க வாலிபன் ஒருவன் கூறினான்.

"ஆகாய விமானத்தில் ஏறிக்கொண்டு மேகமண்டலம்

முழுவதும் சுற்றி வருவது போல காலஇயந்திரத்தில் ஏறிக்கொண்டு முக்காலத்திற்கும் சுற்றி வரலாம் என்று ஒரு கதை அளந்தீர்களே! அதுபற்றித்தானே கூறப்போகிறீர்கள்" என்றார் தர்க்கப்பிரியர் தாந்தோனிராயர்.

"ஆம்! நான் கூறுவது சரியாக இருந்தால் ஒப்புக்கொள்ளுங்கள். இல்லாவிடில் வேண்டாம். தற்போது உலகத்தில் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றி மறுத்துக்கூறப் போகிறேன். உதாரணமாக பள்ளிக்கூடங்களில் க்ஷேத்திர கணிதமானது தப்பான எண்ணத்தின் பேரில் கற்பிக்கப் பட்டதாகக் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது."

"போருமப்பா! உன்னுடைய ஆரம்பமே எவ்வளவு அறிய பெரிய விஷயத்தைப் பற்றிக் கூறப் போகிறாய் என்பதைக் காட்டி விட்டது என்றார் வைத்திய ரத்தினம் வையாபுரி பிள்ளை.

"கணித சாஸ்திரப் பிரகாரம் தடிப்பம் THICKNESS இல்லாமல் வரையப்படும் கோட்டிற்குக்கோடு என்றுபெயர். ஆனல் தடிப்பம் இல்லாமல் ஒரு கோடு வரைய முடியுமா? முடியாது. அதுபோலவே தான் கணித சமபரப்புக்குமாகும். இவைகள் எல்லாம் மானசீகமானவை."

"நீங்கள் கூறுவது சரிதான்" என்றார் வேதாந்தி. "மேற்கூறியவைகளைப் போலவே நீளம், அகலம், உயரம் ஆக மூன்று அளவுகள் இருந்த மாத்திரத்திலேயே 6 பக்கமுள்ள ஒரு கன சதுரத்திற்கு உண்மையான நிலை

ஏற்பட்டு விடுமா? ஏற்படாது என்பது உறுதி"

"இங்கே நான் மறுக்கிறேன். ஒரு கனபதார்த்தமா னது கட்டாயம் நிலைத்திருக்கும்" என்றார் தர்க்கப்பிரியர் தாங்கோனி.

"எல்லோரும் அப்படித்தான் நினைக்கிறார்கள். ஒரு நிமிஷம் நிதானித்து ஆலோசியுங்கள். ஒரு க்ஷணத்தி லான கனசதுரவடிவம் நிலைத்திருக்குமா?"

"நீங்கள் கூறுவது விளங்கவில்லை" என்றார் தாங்கோனி.

"காலமாகாத அதாவது ஒருக்ஷணகாலங்கூட (ஒரு க்ஷணவயதுகூட) ஆகாத ஒரு கன வடிவம் இருக்க முடி யுமா? உங்களுக்கு விரிவாக விளக்கிக் கூறப்போனால் ஒரு உண்மையான கனவடிவத்திற்கு நான்கு அளவுகள் இருந்தே யாகவேண்டும். அவைகளாவது நீளம், அகலம், உயரம் காலம் முதலியனவாகும். மனித சரீரத்தின் இயற்கை முறையினால் நாம் அதை அறிந்து கொள்ளமுடியவில்லை. நாம் அதை அறிந்து கொள்ளாமலிருப்பதற்குக் காரணம் நம் (மனமானது) உணர்ச்சியானது காலத்தினோடு அதன் பாதையில் பிறப்பிலிருந்து இறப்புவரை சென்று கொண்டி ருப்பதினால்தான். ஆகையால் ஒவ்வொரு கனவடிவத்திற்கும் நீளம், அகலம், உயரம் என்னும் மூன்று அளவுகளுடன் காலம் என்னும் நான்காவது அளவும் இருந்துகொண்டி ருக்கிறது. காலமாகாத (வயதாகாத) ஒரு கன வடிவம் இருக்கவே முடியாது. முன்பு நான் கூறியபடி நீளம் என்ற ஒரே அளவுள்ள ஒரு கோட்டிற்கு, அதை வரைய தடிப்பம்

என்னும் அளவு எப்படி அவசியமோ அதுபோலவே நீளம் அகலம் என்ற இரண்டு அளவுகளுள்ள ஒரு சமபரப்புக்கு உயரம் அல்லது ஆழம் வேண்டியிருக்கிறது. அது போல வே நீளம், அகலம், உயரம் என்ற மூன்று அளவுள்ள ஒரு கன வடிவத்திற்கு காலம் என்ற நான்காவது அளவு கட்டாயம் இருந்தே தீரவேண்டும். இப்போது உங்களுக்கு நான்காவது அளவு "காலம்" என்பதை அறிந்து கொண்டிருப்பீர்களென நம்புகிறேன்.

"சரி! நீங்கள் சொல்வது நன்ருக விளங்கிற்று" என்று கூறினர் கணித விற்பன்னர் கணபதியாபிள்ளை.

"சாஸ்திர அறிஞர்கள் தங்களது நீண்ட ஆராய்ச்சியின் பேரில் காலம் என்பது ஒருவிதமான பரப்பளவுதான் என்று கண்டு பிடித்திருக்கிருர்கள். இதோ! காலத்தைக் காட்டும் படியான குறிப்பேடு என்னிடமிருக்கிறது. நான் என் விரலினுல் தொட்டுக்காட்டும் இக்கோடானது வாயுமானியின் காலப்போக்கைக் காட்டும் கோடாகும். நேற்று பகலில் உயர்ந்தும், இரவில் தாழ்ந்தும், இன்று காலையில் மீண்டும் ஏறியுமிருக்கிறது. மேற்படி வாயுமானியிலுள்ள பாதரசமானது காலமாறுதலுக்குத் தக்கினபடி ஏறியோ, இறங்கியோ காட்டுமே ஒழிய, மற்ற மூன்று அளவுகளுக்குத் தக்கினபடி மாறுதல் காட்டாது. அது ஏறியும் இறங்கியும் போய்க்கொண்டிருப்பதிலிருந்து கால அளவை அனுசரித்து கோடுகிழிக்கின்றது. என்பதை நிதரிசனமாகக் கண்டு கொள்ளலாம்."

"தாங்கள் சொல்வது போல காலத்தை ஒருவித பரப்

பளவாகக் கொள்வதானால், மற்ற மூன்று அளவுகளான நீளம், அகலம், உயரம், முதலியவைகளில் பிரயாணம் செய்வது போல காலத்தில் ஏன் செல்லமுடிவதில்லை?"

அவ்வார்த்தைகளைக் கேட்டதும் வாலிபன் சிறிது புன்சிரிப்புடன் "சுலபமாக பரப்பளவில் நாம் பிரயாணம் செய்யக்கூடுமெனக் கருதுகிறீர்களா? வலப்புறமும், இடப்புறமும், முன்னும் பின்னுமாக வேண்டுமானால் போய் வரலாம். மனிதர்களால் சாதாரணமாக அவ்வளவுதான் செய்யமுடிகிறது. இரண்டு அளவுகளில் சுலபமாகப் போக முடியும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் மேலும் கீழுமாகப் போய்வரக் கூடுமா? பூமியின் ஆகர்ஷண சக்தி தடைசெய்கிறதே" என்று கூறினான்.

"நீங்கள் கூறுவது சரியாகாது. ஆகாய விமானங்கள் இருக்கின்றனவே" என்றார் வைத்தியரத்தினம் வையாபுரி பிள்ளை.

"ஆகாய விமான காலத்துக்கு முன்பு மனிதனுக்கு மேலே எகிறிக் குதிப்பதைத் தவிர மேலும் கீழும் செல்ல வழியில்லாமலிருந்தது."

இருந்த போதிலும் கொஞ்சமாகிலும் மேலும் கீழும் எகிறிக்குதிக்கலாமல்லவா" என்றார் வைத்தியரத்தினம் வையாபுரிபிள்ளை.

"மேலே எகிறுவதை விட கீழே குதிப்பது தான் மிக சுலபம்"

"மேலே கொஞ்சமாவது எகிறிப்போய் பார்க்கலாமே. ஆனால் காலத்தில் கொஞ்சங்கூட முடியாதே. இந்த க்ஷணத்திலிருந்து (விநாடியிலிருந்து) நீ விலக முடியாதே."

'அன்பரே! இங்குதான் உங்கள் தப்பிதமிருக்கிறது. உங்களுடையது மாத்திரமல்ல. உலகமே தப்பிதமாக இருக்கிறது. நாம் எப்பொழுதும் இந்த விநாடியிலிருந்து போய்க் கொண்டுதான் இருக்கிறோம். நாம் காலத்தினோடு சென்று கொண்டிருப்பதினால்தான் அறிந்துகொள்ள முடியாமலிருக்கின்றோம்."

"ஆனால் ஒரு சங்கடமிருக்கிறது. பரப்பான இடங்களில் எத்திசைகளிலும் நாம் பிரயாணம் செய்யக்கூடும். ஆனால் காலத்தில் எப்படி பிரயாணம் செய்ய முடியும்" என்றார் வேதாந்தி.

"அதுதான் என்னுடைய அற்புத ஆராய்ச்சியிலுதித்த அரும் விஷயமாகும். காலத்தில் நாம் போக முடியாது" என்று கூறுவது தப்பிதமாகும். உதாரணமாக நாம்மறந்து போன சம்பவத்தை நினைவுக்குக் கொண்டுவருவதானால், அச் சம்பவம் நடந்த காலத்திற்கு நம்நினைவைக் கொண்டு யோசிக்கிறோமல்லவா. பூமியின் ஆகர்ஷணைசக்திக்கெதிராக ஆகாய விமானத்தில் செல்வதுபோல காலத்தில் கூட மனிதன் ஏன் தன்னிஷ்டப்படி அதி தீவிரமாக இறந்த காலத்திற்கோ அல்லது எதிர்காலத்திற்கோ போகக்கூடாது?"

"சே! இதெல்லாம் நியாயத்துக்கு விரோதம். நீங்கள் உங்கள் தர்க்கவாதத்தின் மூலம் கருமை நிறத்தை வெண்மை

நிறம் என்று நிரூபிக்கப் பார்க்கிறீர்கள். என்னை ஒரு நாளும் திருப்திப்படுத்த முடியாது" என்றார் தர்க்கப்பிரியர் தார்தோவிராயர்.

"எப்படி வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளுங்கள். நான் க்ஷேத்திர கணிதத்தில் நான்கு அளவுகள் கண்டு பிடித்ததின் தாத்பரியத்தை அறிந்து கொண்டீர்களல்லவா? நான் வெகு நாளாகவே ஒரு இயந்திரம் உண்டாக்குவதில் முனைந்திருந்தேன்."

"காலப்பிரயாணம் செய்யவா?" என்றார் வேதாந்தி.

"ஆம்! இறந்த, எதிர்காலங்களில் பிரயாணம் செய்யக் கூடிய முறையில் கண்டுபிடிக்க முயற்சித்தேன்"

தர்க்கப்பிரியர் தாசுதோவிராயர் ஏளனமாகப் புன்னகை புரிந்த வண்ணம் "நீங்கள் செய்யும் முயற்சியானது சரித்திராசிரியர்களுக்கு ஓர் நல்ல விஷயமாகும்" என்றார்.

"என் தகப்பனார் சாகுந்தருவாயில் நான் அவர் அருகில் இல்லை. என்னைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற வருத்தத்தோடேயே இறந்தாராம். நீங்கள் கூறுவதைப் பார்த்தால் கால இயந்திரத்தில் ஏறிக்கொண்டு இறந்து போனவனை தந்தையைக் கூடக் கண்டு பேசிவரலாம் போலிருக்கிறதே!! என்றார் விதண்டாவாதம் விசுவநாதய்யர்.

"கடன் பட்டவர்கள்கூட பேசாமல் தம்பி ஓட்டி விடலாம் போலிருக்கிறதே" என்றார் கடனாளி கந்தசாமி.

"உங்கள் மனம்போனபடி பேசிக் கொள்ளுங்கள்

ஆனால் இன்று உங்கள் எதிரிலேயே அதை விஷயமாக ஒரு பரிக்ஷை செய்து காட்டுகிறேன். அப்போதுதான் உங்களுக்கு திருப்தி ஏற்படும்."

"நீங்கள் உரைப்பதெல்லாம் சுத்த புரட்டு என்பதை நாங்கள் அறிந்து கொண்டிருந்தபோதிலும், எதற்கும் உங்களுடைய பரிக்ஷையையும் பார்த்து விடுகிறோமே" என்றார் தர்க்கப்பிரியர் தாங்தோனி.

உடனே புன்சிரிப்புடன் அவ்வார்த்தைகளைச் சிறிதும் சட்டை செய்யாதவராய் மேற்படி வாலிபர் தமது அறைக்குள் சென்றார். "அதற்குள் வேதாந்தி எல்லோரையும் பார்த்து "இவர் ஏதாவது ஒரு தந்திரம் செய்வாரென்று கருதுகிறேன். நாம் யாவரும் மிகக் கவனமாக அவருடைய செய்கைகளைப் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மேற்படி வாலிபன் தன் அறையிலிருந்து ஓர் கருப்புத் துணியால் மூடப்பட்டிருந்த ஓர் பெரிய இயந்திரத்தை மெதுவாகக் கொண்டுவந்து தனது நண்பர்கள் இருந்த அறையில் போடப்பட்டிருந்த ஒரு மேஜைமேல் மெதுவாக வைத்தான். அவ்வியந்திரம் எப்படிப்பட்டது என்பதைக் கவனிக்கும் பொருட்டு அவனுடைய நண்பர்கள் அதன் சமீபம் நெருங்கினார்கள். வாலிபன் அவ்வியந்திரத்தின்மீது மூடப்பட்டிருந்த துணியை எடுத்தான்.

அவ்வியந்திரமானது தர்மம், இரும்பு, தத்திராதம்

போன்ற பல உலோகங்களைக்கொண்டு பல ரசாயனப்பொருள்களின் சேர்க்கையால் செய்யப்பட்டிருந்தது. அதன் ஒரு புறத்தில் இரண்டு நபர்கள் அமரும்படியான விதத்தில் ஒரு பெரிய ஆசனம் பொருத்தப்பட்டிருந்தது. தனது சொக்காய்ப்பையிலிருந்து இரண்டு மறையாணிகளை எடுத்து அவ்வியந்திரத்தில் முடுக்கினான். பிறகு தனது நண்பர்களைப் பார்த்து "அன்பர்களே! நான் கால இயந்திரத்தைப் பற்றிக் கூறியதை நீங்கள் நம்பவில்லை. உங்கள் கண் எதிரிலிருக்கும் இவ்வியந்திரம் தான் கால இயந்திரம். இன்றுதான் முதன் முதலாக பிரயாணம் நான்போகப்போகிறேன். இப்பொழுது நான் முடுக்கின இரண்டு மறையாணிகளில் ஒன்று இவ்வியந்திரத்தைப் புறப்படச் செய்வதற்கும் மற்றொன்று அதை நிறுத்துவதற்குமாகும். நான் இப்போது இதில் பிரயாணம் செய்திலிருந்து நான் கூறுவது உண்மை என உணர்ந்து கொள்ளலாம். இன்னும் ஒரு வார காலத்தில் எனது பிரயாணத்தை முடித்துக்கொண்டு இதே இடத்தில் உங்களை சந்தித்து என்னுடைய பிரயாண வரலாற்றைத் தெரிவிக்கின்றேன். இன்றைக்கு எட்டாம் நாள் மாலை 5 மணிக்கு இதே இடத்தில் என்னைச் சந்திப்பீர்களென நம்புகிறேன்." என்று கூறியபடி வாலிபன் சரேலென அவ்வியந்திரத்தின் ஆசனத்தில் ஏறி அமர்ந்தான். தான் எல்லோரிடமும் போய் வருவதாக ஜாடையாகத் தெரிவித்து விட்டு ஒரு மறையாணியை முடுக்கினான். உடனே இஸ் என்ற சப்தம் கிளம்பியது. விர்ரென்று சுழன்றுக்கொண்டிருந்த அவ்வியந்திரமும் வரவர கண்ணுக்கு மங்கலாகத் தோன்றி கடைசியில் மறைந்து விட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் இஸ் என்ற சப்தமும் ஓய்ந்தது.

"இது ஏதோ ஒரு பெரிய ஜாலவித்தை போலத்தான் எனக்குத் தோன்றுகிறது. எதற்கும் அவர் கூறியபடி இன்றைக்கு எட்டாம் நாள் நாம் வந்து விசாரிப்போம்" என்று தர்க்கப்பிரியர் கூறவே, உடனே எல்லோரும் எழுந்து அவரவர்களுடைய வீட்டிற்குச் சென்றார்கள்.

ஏழாம் அத்தியாயம்.

முடிவாகாத முடிவு.

தன் மேல் ஒப்பற்ற அன்பு வைத்துள்ள குமுதா என்னும் பெண்மணியின் பிரிவைச் சகியாதவனாய், தான் எப்பாடு பட்டாவது அவளை அவ்வெள்ளை யுருவங்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும் எனத்தீர்மானம் செய்து கொண்டான். எதற்கும் ஒரு தடவை குள்ளர்களண்டை குமுதா இருக்கின்றாளா? என பார்த்துவிட்டு அவ்வெள்ளை யுருவங்களைப் பின்பற்றிச் செல்வதுதான் உசிதம் என அவன் புத்தியில் பட்டது. உடனே குள்ளர்கள் வசிக்கும் இடங்களைப் போய்ப்பார்த்தான். சகல குள்ளர்களும் ஆழ்ந்த நித்திரையிலிருப்பதையும் குமுதா மட்டில் அங்கில்லாமலிருப்பதையும் அறிந்து கொண்டான். அவ்வெள்ளை யுருவங்கள்

தான் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவனுய், தான் அங்கு கழட்டி வைத்திருந்த தனது சட்டையைப் போட்டுக் கொண்டு, வெளிச்சத்திற்காக வேண்டி ஓர் பந்தத்தையும் கையிலெடுத்துக் கொண்டு அப்பாழுங் கிணற்றைச் சமீபித்தான்.

மெதுவாக, பந்தத்தைப் பிடித்தவண்ணம் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மூங்கில்வளை ஏணிமூலம் கிணற்றிற்குள் இறங்கினுன். இறங்கும் வழியில் அனேக செடி கொடிகள் ஏகமாக வளர்ந்து வழியை மறைத்தபடி இருந்தபடியால், பந்தத்தை எடுத்துக்கொண்டு அதிஜாக்கிரதையாய் இறங்கும்படி நேர்ந்தது. சுமார் பதினைந்து நிமிஷகாலம் வரை கீழே இறங்கியபின் தன் கால்கள் பூமியின் மேல் படுவதை யறிந்தான். பந்தத்தைக் கொண்டு அவ்விடத்தைப் பார்த்தான். வரிசையாக கீழ் நோக்கிப் படிகள் செல்வதை யறிந்தவனுய், சரசரவென இறங்கி நிலப்பரப்பை யடைந்தான். பூமிக்கு அடியிலுள்ள அப்பூபாகமானது ஒரு சிறிய நகரம் போல் தென்பட்டது. அங்கு கட்டப்பட்டிருந்த கட்டிடங்களின் தன்மையிலிருந்து, ஆதிகாலத்தில் இயந்திரங்களைக் கொண்டு தொழில் நடந்து வந்த ஓர் சுரங்க தொழிற்சாலை யென்பதும், நாளாவட்டத்தில் யந்திர ஆட்சி ஒடுங்கி விட்டபடியால், அச்சுரங்கத்திலேயே வசித்துவந்த மக்கள் அவ்விடத்தை தங்களது நிரந்திர வாசஸ்தலமாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஐயம் தோன்றியது. அவ்வூரைச் சுற்றிலும் தான் இதுகாறும் கண்டறியாத நிறையில் பல செடி கொடிகளும் மரங்களும் வளர்ந்திருப்ப

தைக் கண்டான். சூரிய வெளிச்சமும், உஷ்ணமும் இல்லாதபடியால் அச் செடி கொடிகளின் நிறத்தில் விசேஷ வித்தியாசமிருந்தது. அவ்வூரின் மேற் பாகம் முழுவதையும் தார்சுகட்டிடம் போல், பூ பாகம் மறைத்துக் கொண்டிருந்தபடியால் சூரிய சந்தரனையாவது ஆ கா ச வெளியையாவது காணவேண்டுமாயின் பூமியின் மேற் பரப்புக்கு வந்துதான் பார்க்க வேண்டுமேயன்றி மற்றபடி முடியாது. அவ்வூருக்குள் இறங்கிச் செல்வதற்கு பூமியின் மேற் பரப்பிலிருந்து பல வழிகள் கிழ்நோக்கி இருப்பதையும் அவ்வழிகளின் மூலம் ஜிலு ஜிலுவென காற்று வீசிக்கொண்டிருப்பதையும் கண்டான். எங்கும் காரிருள் கவ்விக் கொண்டிருந்தது.

தான் இவ்வளவு நேரம் நின்று இவ்வளவு தூரம் ஆராய்ச்சிசெய்து கொண்டிருந்தும் ஒருவெள்ளையுருவங்கூட அவன் கண்களில் புலப்படாமலிருந்தது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. த ன து பந்தமானது சி றி து நேரத்திற்குள் அணைந்து விடும் என்பதைக் கண்ட வாலிபன், அப்பந்தம் அணைவதற்கு முன் குமுதாவை அ தி சீக்கிரத்தில் கண்டு பிடித்து விடவேண்டும் எனத்தீர்மானித்தவனாய் சரேலென தனக்கெதிர்புறம் தோன்றிய ஒரு பெரிய கட்டிடத்திற்குள் நுழைந்து ஒவ்வொரு பாகமாக ஆராய்ந்து கொண்டே சென்றான். அக்கட்டிடமானது தொழில் முறைக் கொத்த மாதிரியில் கட்டப்பட்டிருந்ததுடன் ஆங்காங்கு கணக்கற்ற இயந்திரங்கள் வைக்கப்பட்டு இருந்தன. நூற்றுக்கணக்கான வருஷங்களாய் அவைகள் கவனிப்பாரற்று இருந்தபடியால், துருப்பிடித்து சீர் கேடான நிலைமையிலிருந்தன. ஒவ்வொரு

இயந்திரத்தையும் மிக உன்னிப்பாக பரிசோதித்த வண்ணம், குமுதம்!! குமுதம்!! என்று பலத்த குரலில் கூப்பிட்ட வண்ணம் சென்று கொண்டிருந்தான். எவ்வளவோ பலமாகக் கூப்பிட்டுப் பார்த்தும் யாதொரு பதிலும் கிடைக்காமலிருந்ததுடன், ஒரு மனித உருவங்கூட அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. ஆனால் தனக்கு முன்னும் பின்னும் யாரோ நடந்து செல்வது போன்ற ஒரு சிறிய சப்தம் கேட்டதேயன்றி எவரும் புலப்படவில்லை. நாம் நடக்கும் சப்தமே நமக்கு எதிரொலியாக கேட்கின்றது போலிருக்கின்றது என நினைத்துக் கொண்டவனாய் ஒவ்வொரு இடமாகச் சென்று பார்வையிட்டபடி சென்றான். நேரஞ் செல்லச் செல்ல பந்தமும் சிறிது சிறிதாக மங்கத் தொடங்கியது. ஒளி மங்க மங்க வாலிபனுடைய மனமும் சிறிது சிறிதாக நம்பிக்கையை இழந்து வந்தது.

பல அறைகளையும் கூடங்களையும் ஆராய்ச்சி செய்தபின் முடிவாக ஓர் பெரிய கூடத்தை வந்தடைந்தான். கடைசித்தரமாக அவ்விடத்தைச் சுற்றிப்பார்த்து விட்டு திரும்பி விடுவதெனத் தீர்மானித்தவனாய் அங்கு சென்றான். அக்கூடத்தின் நடுவில் ஓர் பிரம்மாண்டமான இயந்திரம் வைக்கப்பட்டிருந்ததுடன் அதைச் சுற்றிலும் ஒவ்வொரு பெரிய பீப்பாய் போன்ற இரும்புக்குழாய்கள் பொருத்தப்பட்டு இருந்தன. அவ்வியந்திரத்தை பரிசோதித்தபடியே "குமுதா குமுதா" என்று பலமாக இரண்டு முறை கூப்பிட்டான். பதில் ஒன்றும் காணோம். ஆனால் தனக்கு மிகச் சமீபத்தில் யாரோ பலர் தட தடவென நடந்து செல்வது போலத் தோன்றியது. திரும்பிப் பார்த்தான். ஒருவரும் காணபடவில்லை.

நல்ல தைரியவானாக இருந்தும் அவ்வாலிபன் மனதை அச்சப்தமானது திடுக்கிடச்செய்தது. இருந்தபோதிலும் அதைச்சிறிதும் பாராட்டாதவனாய் கடைசியாக ஒருதடவை பரிசோதித்துவிட்டு சென்று விடுவது எனத்தீர்மானித்தவனாய் குமுதாவை மற்றோர் முறை உறக்கக் கூப்பிட்டான். அப்போது யாரோ "என்ன"! என ஈனஸ்வரத்தில் பதிலளித்த மாதிரி தோன்றியது. அது யாருடைய சப்தமாக இருக்கும் எனக்காதுகொடுத்துக் கேட்டான். எங்கும் நிசப்தந் தான் நிலவி யிருந்தது. மீண்டும் ஓர் முறை குமுதாவைக் கூப்பிட்டான். அதற்கு உத்திரமாக "ஐயோ! இங்கு வாருங்கள்"!! "என்று புறப்பட்டது ஒரு ஒலி. 'குமுதாவிற்குத் தமிழ் பாஷை தெரியாதே. யார் அழைத்து இருக்கக்கூடும், என யோசித்தவனாய் சப்தம் வந்த திக்கை நோக்கி நடந்தான். நெருக்கமாக இரும்புக்குழாய்களாலும் உருளைகளாலும் குவிந்து கிடக்கப்பட்ட அக்கூடத்தின் ஒரு புறத்திலிருந்து ஒருதலை எட்டிப்பார்த்தது. அவ்வுருவத்தின் முகத்தைக் கண்டதும் "ஆ! தவமணி!! நீயா இங்கு இருக்கின்றாய்" என்று கூறியபடி பந்தத்தை ஒருபுறத்தில் நிறுத்தி வைத்து விட்டு அவள் சமீபம் பாய்ந்து சென்றான். அப்பெண்மணியை அவ்விரும்பு உருளைகளின் மத்தியிலிருந்து மெதுவாகத் தூக்கி எடுத்தான். அவள் உடலானது மகா துர்பலமாய் மெலிந்து கேவலஸ்திதியிலிருந்தது. பேசக்கூடச் சக்தியற்ற நிலையிலிருந்தும், அவ்வாலிபனைக் கண்டதும் அவளது மனமானது சந்தோஷத்தினால் பூரித்து திரேகத்தில் ஒருவித சக்தியைக் கொடுத்தது.

அவளை வெளியில் எடுத்ததும், அவளது தோற்றத்தைக்

கண்டு வெகுவாக வருந்தினன். அவளது முழு விருத்தாந்தங்களையும் அறிய ஆவல் கொண்டிருந்தும், தான் நிலத்தில் வைத்திருந்த பந்தமானது அணையும் தருவாயைக் கண்டு, அது அணைவதற்குள் பூமியின் மேற்பரப்புக்குச் சென்று விட வேண்டும் என நிர்மானித்தவனாய், தவமணியின் கரத்தைப் பற்றி அழைத்துக் கொண்டு பந்தத்தின் உதவியால் சரசரவென பல கூடங்களையும் கடந்து கட்டிட வாயிலை அடைந்தான். ஆனால் அதற்குள் பந்தத்தின் ஒளி மங்கி அணைந்து போயிற்று. பந்தம் அணைந்ததும் தான் தாமதம். இருவர்களுடைய உடலிலும் யாரோ கிசுகிசு மூட்டுவது போல முதலில் தோன்றியது. பிறகு கால்களைப் பிடித்து இழுப்பது போலவும், பற்களால் கடிப்பதுபோலவும் தெரிந்தது. ரௌத்திராகாரமான கோபத்துடன் அவ்வெள்ளை யுருவங்களை ஒரு உதறு உதறித்தள்ளினன். என்ன தள்ளியும் அவைகள் நூற்றுக்கணக்காக ஒருங்கு சேர்ந்து தங்களை நோக்கி வருவதை அறிந்து கொண்டான். தவமணியும் வாலிபனும் தங்களது கைகளால் எவ்வளவோ விலக்கித் தள்ளியும், அவர்களைச் சமாளிக்கக் கூடவில்லை. நேரஞ் செல்லச் செல்ல வெள்ளை யுருவங்களின் எண்ணிக்கை அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. முடிவில் மேற்படி வெள்ளை யுருவங்கள் பலவீனமான ஸ்திதியிலிருந்த தவமணியின் காலைப் பற்றி யிழுத்து விட்டன. தவமணி "ஆ" வென்றலறியபடி கீழே விழுந்தாள். கீழே விழுந்ததுமன்றி அவ்வுருவங்களால் அடிபட்டுத் தாங்கமாட்டாது மூர்ச்சித்து விழுந்தாள். அதற்குள் நமது வாலிபனுடைய நிலைமையும் பரிதாபகரமான ஸ்திதிக்கு வந்து கொண்டிருந்தது. நூற்றுக்கணக்

கான வெள்ளைக் குள்ளர்கள் சூழ்ந்து கொண்டு எதிர்க்கும் போது நம் வாலிபனால் யாது செய்ய முடியும்? சிறிது நேரத்திற்கெல்லாம் அவனும் வீழ்த்தப்பட்டான்.

"சரி! நம் வாழ்நாள் முடிந்தது போல்தானிருக்கிறது" என எண்ணியவனாய், அவர்களைச் சமாளித்துக்கொண்டு எழுந்திருக்க பிரயத்தனம் செய்தான். அப்போது தன் தேகத்தின் அள்ளைப் புறத்தில் ஏதோ ஒரு கடினமான வஸ்து குத்துவது போன்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. அது என்னவென்றறிய ஆர்வங் கொண்டவனாய் தன்மேல் ஏறி அமிழ்த்திக் கொண்டிருந்த வெள்ளையர்கள் பதின்மரையும் தன் முழு பலத்தையும் உபயோகித்து நெட்டித்தள்ளினான். தள்ளிய வேகத்தில் அவர்கள் யாவரும் ஒருவர்மேலொருவராக மோதி யடித்துக்கொண்டு மண்ணைம் கீழே உருண்டார்கள். அதே சமயம் சரேலென பாய்ந்தெழுந்த வாலிபன் தன்னை உறுத்திய வஸ்து என்னவென சொக்காய்ப் பையினின்று எடுத்துப் பார்த்தான். தானும் தவமணியும் நான்கு தினங்களுக்கு முன் கோட்டாவின் பங்களாவினின்று தப்பித்து ஓடும்பொழுது போலீஸ் உத்தியோகஸ்தரால் தனக்களிக்கப்பட்ட பாட்டரி விளக்கு எனத் தெரிந்ததும், அவன் மனதில் சந்தோஷம் பொங்கி யெழுந்தது. உடனே விளக்கைப் பொருத்தினான். பளிச்சென்று பிரகாசம் வீசிற்று. சூரியனைக் கண்ட பனி போல அவ் வெளிச்சத்தைக் கண்டதும் வெள்ளையர்கள் ஓடிவிட்டார்கள். அங்கு மூர்ச்சித்துக் கிடந்த தவமணியை ஆர்வாசப்படுத்தி இனிவெள்ளையர்களைக் கண்டு அஞ்ச வேண்டாம் எனத் தேர்

தல் மொழி கூறிக்கொண்டு பூமியின் மேற்பரப்புக்குச் செல்லும் வழியை யடைந்தான். அவ்வழியின் மேல் விழி வைத்து மேற்புறத்தைப் பார்த்தான். பொழுது புலர்ந்து வெகுநேரமாய் இருப்பதைக் கண்டான்.

மெதுவாகத் தவமணியை அழைத்துக் கொண்டு மேலே ஏறினார்கள். பாதி தூரம் வரை ஏறியதும், அப்பாட்டரி விளக்கிறெளியில் அப்பூமியில் வளர்ந்திருந்த புதரில் ஓர் வெள்ளை வஸ்திரம் தெரிந்ததைக் கண்டதும் அது என்ன வென் சமீபத்தில் சென்று உன்னிப்பாகக் கவனித்தான். குமுதாவின் சரீரம் தலைகிழாகத் தொங்கிக் கொண்டிருப்பதைக் காணவே அவன் மனமானது சொல்லொணு வருத்தத்தில் மூழ்கியது. அவ்வெள்ளை யுருவங்கள் அவளைக் கொன்று அக்கிணற்றில் வீசி எறிந்திருக்கவேண்டும். ஆனல் அச்செடி கொடிகளால் தடுக்கப்பட்டு தொங்கிக் கொண்டிருக்கிருள் என்பதை ஊகித்துணர்ந்து கொண்டான். தவமணியைக் கூட்டிக் கொண்டு போய் மேலே சேர்ந்தவுடன் மறுபடியும் கீழே இறங்கி குமுதாவை எடுத்துத் தோளில் சாற்றிய வண்ணம் மேலே கொண்டு சென்றுன். அதற்குள் நூற்றுக்கணக்கான குள்ளர்கள் குமுதா இறந்து கிடப்பதைக் கண்டு வருந்தி, அவளைத் தங்களது இல்லத்திற்கு எடுத்துச் சென்றனர்

தவமணி அன்றையதினம் அவ்வாலிபனுடன் அவ்வியந்திரத்தில் (கோட்டாவின் கைக்கு அகப்படாமல்) பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் தான் தவறி விழுந்ததையும் தான் விழுந்த இடம் நல்ல புல்தரையான இடமாதலால்

அடிபடாமல் தப்பித்துக்கொண்டதையும், அது சமயத்தில் குமுதாவுக்கு நேர்ந்த ஆபத்தைப் போக்கத்தான் உதவ வந்து ஆபத்தில் சிக்கிக் கொண்டதையும், பூமிக்கடியில் (சுரங்கத்தில்) வெள்ளை யுருவங்களோடு போராடி, தந்திரமாகத் தப்பி இயந்திரசாலையில் மறைந்துகொண்டிருந்ததையும், சரியான ஆகாரமில்லாமல் தவித்து, உயிர்போகும் படியான நிலைமையிலிருக்கையில் நம்வாலிபர் வந்து உதவியதையும் பற்றிச் சாங்கோபாங்கமாக மேற்படி வாலிபனிடம் தெரிவித்தாள்.

அதன் மேல் வாலிபன் தவமணியைப் பார்த்து "சரி என்னுடைய இயந்திரத்தை சமீபத்தில்தான் வைத்திருக்கிறேன். நாம் நம்முடைய காலப் பிரயாணத்தால் எவ்வளவோ விஷயங்களை அறிந்து கொண்டு விட்டோம். நாம் சிறிது காலம் ஓய்வெடுத்துக்கொள்ள நிகழ் காலம் செல்வோம்" என்றான். அதன் மேல் தவமணியும், வாலிபனும் குள்ளர்களிடம் தாங்கள் சென்று வருவதாக ஜாடை காட்டி விட்டு, கால இயந்திரத்தில் ஏறி நிகழ் காலத்திற்குப் புறப்பட்டார்கள்

❖ ❖ ❖

"தாங்கள் கூறிய வரலாற்றிலிருந்து இவ்விடமிருந்து எதிர்கால யாத்திரை புறப்பட்டதும், கி. பி. 2006ம் ஆண்டில் கோட்டாவால் சிறைவைக்கப்பட்டு தவமணியால் தப்புவிக்கப்பட்டதும் பிறகு இருவருமாக மேன்மேலும் எதிர்காலப் பிரயாணம் செய்ததும், வழியில் தவமணி தவறி விழுந்து குள்ளருலகில் பட்ட பலவித அவஸ்தைகளும், நீங்கள் சென்று அவளைக் காப்பாற்றிய விவரங்களையும் அறிந்து கொண்டோம். ஆனால் கோட்டா ஏன் உங்களைச் சிறை

பிடித்தான்? உங்கள் அருகில் இருந்த கரிய உருவத்தின் வரலாறு என்ன? என்ற விவரங்களைத்தான் அறிந்துகொள்ள முடியவில்லை" என்றார் கணித விற்பன்னர் கணபதியா பிள்ளை.

"நான் சுடுமணலில் நடந்த களைப்பால் படுத்திருக்கை யில், அங்கு வந்த கோட்டா என்னைத் தன் காரில் வைத்துக் கொண்டு சென்றான். நான் மயக்க முற்றிருந்தபடியால் என் ஜேபியை சோதனை செய்து கால இயந்திரத்தின் விவ ரத்தை அறிந்துகொண்டு, அதைக் கொடுத்தாலொழிய உயிருடன் விடமுடியாதென சிறைப்படுத்தினான். எனக் கெதிர்ப்புறமிருந்த கரிய உருவம் உண்மையான மனித உரு வமல்ல. அது ஒரு இயந்திரத்தால் செய்யப்பட்டு என் படுக்கைக்கு பொருத்தி வைக்கப்பட்டிருந்தது. நான் தப்பி ஓடமுயன்றால் சுட்டுவிடும்படியான முறையில் அமைக் கப்பட்டிருந்தது. ஒரு நாள் யதேச்சையாகத் தவமணி என் அறைச் ஜன்னல் மூலம் என் பரிதாபநிலைமையைப் பார்த் தாள். என் பேரில் இரக்கப்பட்டு அடிக்கடி வந்து என் வரலாற்றை விசாரித்தறிந்து, தந்திரமாக என்னைவிடுவித்தாள்.

"தங்கள் சாமார்த்தியத்திற்கும், ஆராய்ச்சி திறனுக்கும் அபார தைரியத்திற்கும் உங்களுக்கிடப்பட்ட "காலசிம் ஹறன்" என்ற பெயர் ரொம்பவும் பொருத்தமான பெயர் தான். இருக்கட்டும்! தங்களைக் காப்பாற்றிய அந்தவீர நாரீமணியை நீங்கள் தரிசிக்கலாமா?" என்றார் வேதாந்தி.

"தற்போது அது சாத்தியமில்லை. நாங்கள் திரும்பி வருகையில் கி. பி. 2006ம் ஆண்டில் இறங்கினோம். தவமணி செய்த தந்திரம் உண்மையாகவே நடந்திருந்ததைக் கண் டோம். அதாவது கோட்டா ஒரு வேவுகாரன் எனச் சோத

லையில் கண்டுபிடித்த இந்திய சர்க்கார் அவனைச்சிறையிலிட்டு விட்டனர். தவமணியால் தங்களுக்கு அநுகூலமாக அந்தரங்கம் தெரிய வந்ததிற்காக அவளை ப்பாராட்டி பரிசுகள் அளித்தனர். தவமணிக்கு சிறிது காலம் அங்கு தாமதிக்க நேரிட்டபடியால் நான் உங்களிடம் வாக்குறுதி செய்தபடி வந்து சகல விவரங்களையும் கூறிவிட்டேன்'' என்றான் காலசிம்ஹறன்.

''நீங்கள் கூறிய யாவற்றையும் நான் ஒரு கற்பனைக் கதையாகத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள்மீண்டும் போய்த் தவமணியை மணந்து அவளை அழைத்து வருவதுடன் அக்காலத்திய சில ஆபீசு ரிகார்டுகளையும் கொண்டு வந்து எனக்குச் சந்தேகமறக் காட்டி நிரூபித்தாலொழிய உம்முடைய ஆராய்ச்சியில் எனக்கு நம்பிக்கை ஏற்படவே ஏற்படாது'' என்றார் தர்க்கப்பிரியர் தாந்தோனி ராயர்.

காலசிம்ஹறன் புன் சிரிப்புடன் தாந்தோனியைப் பார்த்து ''சந்தேகங்களின் அவதார புருஷரே! தாங்கள் கோரியபடியே நாளைய தினமே சென்று அவளை மணம் புரிந்து இன்னும் ஒரு மாத காலத்தில் வந்து சேருகிறேன்'' என்று கூறினான்.

பிறகு காலசிம்ஹறனின் நண்பர்கள் அவனிடம் விடை பெற்றுச் சென்றனர். சரியாக ஒரு மாதம் வரையில் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தார்கள். ஒருமாதம் கழிந்ததும் பிரதி தினமும காலசிம்ஹறன் வந்துவிட்டானவென அவன் வீட்டில் விசாரித்தவண்ணமாகவே யிருந்தார்கள். ஆனால் காலசிம்ஹறன் வரவேயில்லை. எங்கு, தவமணியின் காதற்களியாட்டத்தில் மூழ்கி நண்பர்களை மறந்து விட்டானோ என்னவோ! யார் கண்டார்கள்!! பொறுத்திருந்து பார்ப்போம்.

சுபம்!!

ஏன் எங்கள்

நாவல் வெளியீ

விளம்பரம் செய்யவேண்டும்?

1. மிகச்சிறந்த நாவல் மிகக் குறைந்த விலையில் விற்பதால் சகல மக்களும் வாங்கிப் படித்து இன்புறுகிறது.
2. படித்தவுடன் எறிந்துவிடாமல் அலமாரிகளில் அலங்கரித்து வைப்பார்கள்.
3. ஆதலால் உங்கள் விளம்பரங்களும் எல்லோருடைய வீட்டிலும் பிரகாசித்துக்கொண்டேயிருக்கும்.
4. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகளிருப்பதால் நாவல்கள் விற்பனை அதிகம்.
5. விளம்பர சார்ஜே மிகக்குறைவு.

ஆதலால் உடனே உங்கள் விளம்பரங்களை அனுப்புங்கள்.

மற்ற விபரங்களுக்கு மேனேஜருக்கு எழுதவும்.

நாவல் பிரசுராலயம், சேலம்.